விலை: 30.00
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 17 திங்கட்கிழமை (01.03.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 072

ஈழத் தமிழர்களுக்கு நீதி கோரி

## ஐ.நா முன்றலில் இன்று கவனயீர்ப்பு

(ஜெனிவா)

ஜெனிவா ஐ.நா மனித உரிமை பேரவை முன்றலில் இன்று பிற்பகல் இரண்டு மணிக்கு தமிழர்களுக்கு எதிரான அநீதிகளுக்கு நீதி கோரும் 19

## கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட 7 வயது சிறுவன் உயிரிழப்பு

கிளிநொச்சியில் பயங்கரம்

(யாழ்ப்பாணம்)

உடன்பிறவாத சகோதரனால் தாக்கப்பட்ட சிறுவன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

சிறுவனின் தலையில் கூரிய ஆயுதத் 19

இலங்கையை குற்றவியல் நீதிமன்றில் முற்படுத்தக்கோரி

# உணவு தவிர்ப்பு போராட்டம் நல்லூரில் நேற்று ஆரம்பம்

பல்கலை மாணவர்கள், மதத் தலைவர்கள் பங்கேற்பு



*(யாழ்ப்பாணம்)*

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துமாறு வலியுறுத்தி நல்லூரில் அமைந்துள்ள நல்லை ஆதீனத்துக்கு முன்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டம் ஆரம்பமாகியுள்ளது. *(19ஆம் பக்கம் பார்க்க)*

## சாதாரண தரப் பரீட்சை இன்று ஆரம்பம்

(கொழும்பு)

2020ஆம் ஆண்டுக்கான கல் 19

**வாழ்த்துகிறோம்**



இன்று ஆரம்பமாகும் க.பொ.த சா/த பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் அனைவரும் சிறந்த பெறுபேறுகளைப் பெற வாழ்த்துகிறோம்.

**வலம்புரி கல்விப் பிரிவு**

ஏழாலைப் பகுதியில்

## ஹெரோயினுடன் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஏழாலை பகுதியில் 21 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் 20 வயதான இளைஞன் ஒருவன் 19

## வடக்கில் 7 பேருக்கு நேற்றும் கொரோனா

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தினைச் சேர்ந்த ஏழு பேர் புதிதாக தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களில் யாழைச் சேர்ந்த ஒருவர், மன்னாரைச் சேர்ந்த ஐவர். அவர் 19

நெல்லியடி தனியார் வைத்தியசாலையின்

## ஆய்வுகூட தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் நெல்லியடி தனியார் வைத்தியசாலையில் ஆய்வுகூட தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று 19

## கொரோனாத் தொற்று நிலைவரம் யாழில் அபாயகரமாக உள்ளது

அரச அதிபர் மகேசன் எச்சரிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ளோரால் தொற்று உறுதி செய்யப்படுகின்ற நிலையானது மிகவும் அபாயகரமான நிலையாக காணப்படுவதாக மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட 19

## மரணச் சடங்கில் மோதல் 6 பேர் வைத்தியசாலையில்

வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

சிதம்பரபுரம் மதுரா நகர் பகுதியில் மரணவீடு ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

குறித்த மரணக்கிரியை நடந்த வீட்டிலேயே மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று அதிகாலை 19

எதிர்வரும் ஜுன் மாதத்துக்குள்

## மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசாங்கம் திட்டம்

(கொழும்பு)

மாகாண சபைக்களுக்கான தேர்தலை எதிர்வரும் ஜுன் மாதத்திற்குள் நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

தேர்தலை நடத்துவது குறித்து முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களை 19

## சர்வதேச விசாரணை மூலம் குற்றவாளிகளுக்கு தண்டனை

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் அறிவிப்பு



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் தொடர்புள்ள அனைவருக்கும் தமது ஆட்சியில் சர்வதேச விசாரணை அல்லது உள்நாட்டு விசாரணை மூலம் தண்டனை அளிக்கப்படுவது 19

## கோவிட்டால் நேற்றும் 7 பேர் மரணம்

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மேலும் 7 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார 19

# புலிகளின் மூத்த தளபதி பயணித்த கப்பல் கப்டன்

## வல்வையில் நேற்று காலமானார்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் மூத்த தளபதி கிட்டு பயணித்த கப்பலின் கப்டன் வல்வெட்டித்துறையில் நேற்று காலமானார்.

1993 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16ஆம் திகதி புலம்பெயர் தேசத்திலிருந்து விடுதலைப் புலிகள் அமைப்பின் மூத்த தளபதி கிட்டுவும் 9 போராளிகளும் தாயகம் திரும்பிக்கொண்டிருந்தபோது இந்தியக் கடற்படை சுற்றிவளைத்து அவர்களை கைது செய்ய முற்பட்டது.

அதன் போது போராளிகள் கப்பலை தகர்த்து தங்கள் உயிர்களை அழித்தனர்.

சம்பவத்தின்போது கப்பலின் கப்டனை கடலில் குதிக்குமாறு போராளிகள் கேட்டுக் கொண்டதால் அவர் கடலில் குதித்த நிலையில் இந்தியக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

பின்னர் இந்திய சிறைச்சாலைகளில் சிறைவாசம் அனுபவித்த அவர் இலங்கை திரும்பி வல்வெட்டித்துறையில் வசித்து வந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஞா)


காரைநகர்
கிழவன்காடு கலாமன்றம்
நடாத்தும்

### ஸ்தாபக தின நிகழ்வு

( ஸ்தாபிதம் - 01.03.2002 )

இடம் :- கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்.
காலம் :- 01.03.2021 திங்கட்கிழமை பி.ப 3.30 மணி

**தலைமை**
திரு. **ந. சோதிநாதன்** அவர்கள்
( ஸ்தாபகரும் தலைவரும், கிழவன்காடு கலாமன்றம், காரைநகர் )

**கௌரவிப்புரை**
செஞ்சொற்செல்வர் கலாநிதி **ஆறு திருமுருகன்** அவர்கள்

**நிகழ்ச்சிகள்**

**நாட்டியாஞ்சலி**
**" நிருத்திய அர்ப்பணம் "**
நெறியாள்கை ஸ்ரீமதி சத்தியப்பிரியா கஜேந்திரன் அவர்கள்
(சிரேஷ்ட விரிவுரையாளர், நடனத்துறை, யாழ். பல்கலைக்கழகம் )

**சிறப்பு பட்டிமண்டபம்**
" கொரோனாவின் வெற்றியில் பெரிதும் வெளிப்படுவது "



**விஞ்ஞானத்தின் தோல்வியே!**
கு. பாலஷண்முகன்
அ. வாசுதேவா

**மெஞ்ஞானத்தின் தோல்வியே!**
பரா. ரதீஸ்
இ. சர்வேஸ்வரா

நடுவர் : **கம்பவாரிதி இ. ஜெயராஜ்**

கிழவன்காடு கலாமன்றம் வழங்கும்
**" சிதம்பர ஜோதி "**
**உயர்விருது பெறுவோர் - 2021**



**வைத்திய நிபுணர் நமசிவாயம் சரவணபவ**



**இசை ஆசிரியை சந்திரிக்கா கணேஸ்பரன்**

(C-1558)

சிதம்பர ஜோதி விருது பெறுபவர்களை கௌரவிக்க விரும்புபவர்கள் கௌரவிக்கலாம்.
குறிப்பு : நிகழ்வு சுகாதார முறைகளுக்கு அமைவாக நடைபெறும்.
நிகழ்விற்கான இலவச போக்குவரத்து சேவை கலாமன்ற யாழ். கிளையில் இருந்து பி.ப 3.00 மணிக்கு ஆரம்பமாகும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்,
கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்.


# உருளைக்கிழங்கிற்கான இறக்குமதி வரியை விரைவில் அதிகரிப்பதற்கு நடவடிக்கை

## யாழில் அமைச்சர் அஜித் நிவாட் உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தினை மேற்கொண்டுள்ள நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் நேற்றைய தினம் யாழ். குப்பிளான் பகுதியில் இடம்பெற்ற உருளைக்கிழங்கு அறுவடை விழாவிற்கு பிரதம விருந்தினராக கலந்துகொண்டார். குறித்த நிகழ்வில் அறுவடைக்கு தயாரான உருளைக்கிழங்குகளை சம்பிரதாயபூர்வமாக அறுவடை செய்து வைத்தார். இந்நிகழ்வில் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவரும், யாழ். மாவட்ட அபிவிருத்திக்குழுவின் இணைத் தலைவருமான அங்கஜன் இராமநாதன், வடமாகாண பிரதி விவசாய பணிப்பாளர் திருமதி. எஸ்.அஞ்சனாதேவி, யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன், உள்ளூர் விவசாயிகள் என பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து விவசாயிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்ட இராஜாங்க அமைச்சர் விவசாயிகளின் பல்வேறு தேவைப்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்தார்.

குறிப்பாக உருளைக்கிழங்கிற்கான வரியை அதிகரிப்பதன் ஊடாகவே உள்ளூர் விவசாயிகளுக்கு அதிக விலையை பெற்றுகொடுக்கமுடியும் என அங்கஜன் இராமநாதன் இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ராலிடம் விவசாயிகள் சார்பாக சுட்டிக்காட்டியிருந்தார். இந்த விடயம் தொடர்பில் உருளைக்கிழங்கிற்கான வரியினை ஒரிரு வாரங்களுக்குள் அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதாக இராஜாங்க அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார். தொடர்ந்து வரி அதிகரிப்பு சம்பந்தமாக விதை உருளைக்கிழங்கு பயிரினை விதைப்பதற்கு முன்னரே நடவடிக்கை எடுப்பதன் மூலம் பல விவசாயிகளை உருளைக்கிழங்கு பயிரிடுவதற்கு ஊக்குவிப்பதாக அமையும் என விவசாயிகள் கேட்டுகொண்டனர். அதற்கும் உரிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்படும் என தெரிவித்தார். (ஞா-18,33)

# பலசரக்கு விற்பனை நிலையத்தில் தீ விபத்து

## வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா மகாறம்பைக்குளம் பகுதியில் அமைந்துள்ள பலசரக்கு விற்பனை நிலையம் நேற்று மாலை தீப்பிடிந்து எரிந்தமையால் பெறுமதியான பொருட்கள் தீயில் எரிந்து நாசமாகியது.



குறித்த வர்த்தக நிலையம் நேற்று மாலை திறக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் மாலை 5 மணியளவில் திடீர் என்று கடை தீப்பிடித்து எரிந்துள்ளது.

இதனை அவதானித்த அங்கிருந்த இளைஞர்கள் மற்றும் கிராம மக்கள் தீயை அணைப்பதற்கு கடுமையான முயற்சிகளை எடுத்தபோதும் வியாபார நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த அனைத்து பொருட்களும் முற்றாக எரிந்து சாம்பலாகியது.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஞா-299)

# மரண அறிவித்தல்



பிறப்பு : 22.04.1943
இறப்பு : 28.02.2021

## இராயப்பு அமிர்தநாயகம்

கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் உடுவில், மல்வத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராயப்பு அமிர்தநாயகம் நேற்று (28.02.2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராயப்பு - றோசலீன் தம்பதியரின் அன்பு மகனும் புனிதமலரின் பாசமிகு கணவரும் மன்றோமக்ரலீன் (முன்பள்ளி ஆசிரியை), பிறிஸ்ரெலின், பபிறோஸ்ரலீன், சீபஸ் ஜன்ரீன்ராஜ், சீபஸ் கிறிஸ்ரின்ராஜ், ஜாக்குலின் (ஆசிரியை - பளை மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் மகாதேவன், உதயகாந்தன், தாவீது (போதகர்), நிஷாந்தினி (மானிப்பாய் மகளிர் கல்லூரி), மனோகரராணி, அமலசாள்ஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் வேஜினி, லெபோன் பேழினி, லிஷா, லியோன், மெல்வின், ஜனோஷன், மெல்சிகா, அபிஷன், ஜோனிஷ்கா, அபிக்னா, அக்னாஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றுத் திருப்பலி இன்று (01.03.2021) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக மல்வம் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மல்வம், உடுவில். 077 173 8611 077 640 7658 (C-1560) தகவல்:- குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



பிறப்பு : 1936.05.16
இறப்பு : 2021.02.28

## திருமதி இராசா அன்னரத்தினம் [அன்னம்மா]

பெரியன் சீமா, தெல்லிப்பளையைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசா அன்னரத்தினம் நேற்று (28.02.2021) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற முருகேசு - தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கிருஸ்ணர் - அன்னமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராசாவின் அன்பு மனைவியும் திருமதி நடராசா வைத்தீஸ்வரி, காலஞ்சென்ற கந்தசாமி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சிறீதரன் (நிர்வாக முகாமையாளர் - வடமாகாண துடுப்பாட்ட சங்கம்), செல்வராணி (ஓய்வுநிலை ஆசிரியர் -கண்டி), சிறிஸ்கந்தராசா (லண்டன்), புஸ்பராணி (லண்டன்), செல்வறஞ்சன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ரோகினி, பார்த்தீபன் (ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்), பவானி (லண்டன்), வதனா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும் டிலக்ஷன் (ஆசிரியர் - மன் / புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி), கஜந்தன், ஆதித்தன், வைஸ்ணவி, அபினேஸ், தர்சிகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (01.03.2021) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மல்லாகம் கட்டுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பெரியன் சீமா, தெல்லிப்பளை. (C-1559) தகவல்:- குடும்பத்தினர்

# இந்தியாவைப் பகைக்காதது 13ஐ நீக்கவே புதிய அரசியலமைப்பு-சுரேஷ் பிரேமச்சந்திரன்

(யாழ்ப்பாணம்)



**இந்தியாவை வெளிப்படையாக பகைக்காது 13ஆவது திருத்தச்சட்டத்தினை முழுமையாக நீக்குவதற்காகவே புதிய அரசியலமைப்பினை உருவாக்கும் செயற்பாட்டில் அரசாங்கம் களமிறங்கியுள்ளதாக தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் இணைப்பேச்சாளரும் மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவருமான சுரேஷ் பிரேமச் சந்திரன் தெரிவித்தார்.**

புதிய அரசியலமைப்புச் செயற்பாடுகளின் பின்னால் உள்ள அரசாங்கத்தின் சூட்சுமமான திட்டம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போதைய ஆட்சியாளர்கள் தமக்கு தேவையான சர்வாதிகாரத்தினை வலுப்படுத்துவதற்காக ஏற்கனவே அரசியலமைப்பில் 20 ஆவது திருத்தச்சட்டத்தினை மேற்கொண்டுள்ளனர்.

அதன்மூலம் ஜனாதிபதிக்கான நிறைவேற்று அதிகாரம் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. தற்போதைய நிலையில் தேர்தல் முறைமையில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும் என்பதற்காகவும் ஒரே நாடு ஒரே சட்டம் என்ற கோட்பாட்டிற்கு அமைவாகவும் அடிப்படைச்சட்டத்தினை மாற்றுவதற்காகவுமே புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுவதாக கூறப்படுகின்றது.

உண்மையிலேயே உருவாக்கப்படும் அரசியலமைப்பானது சிறுபான்மை மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாகவோ அல்லது இனப்பிரச்சினைக்கு தீர்வளிக்கக்கூடியதாகவோ அமையும் என்று நாம் கருதவில்லை.

அரசாங்கத்தின் சமகாலச் செயற்பாடுகளின் அடிப்படையில் பார்க்கின்றபோது புதிய அரசியலமைப்பானது தமிழர்களின் கோரிக்கைகளுக்கு எதிரானதாகவே அமையும் என்றே எண்ண முடிகின்றது.

இந்நிலையில் மிக முக்கியமாக 1987ஆம் ஆண்டு இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின் மூலம் இலங்கை அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்ட 13ஆவது திருத்தச்சட்டத்தினை முழுமையாக அகற்றுவதே அரசாங்கத்தின் நோக்கமாக இருக்கின்றது.

அதன்மூலம் மாகாண சபை முறைமைகளை முழுமையாக நீக்குவதும் மத்திய அரசாங்கத்தின் மூலம் நேரடியான ஆட்சியை முன்னெடுப்பதும் அரசாங்கத்தின் நோக்கமாகவும் உள்ளது.

ஆகவே 13ஆவது திருத்தச்சட்டத்தினை நீக்கி அதன் மூலம் மாகாண சபை முறைமைகளை நீக்கப்படுமாயின் அதனால் இந்தியாவின் அழுத்தங்களுக்கு அல்லது நேரடியான தலையீடுகளுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலைமைகள் ஏற்படலாம் என்று இலங்கை அரசாங்கம் கருகின்றது.

எனவே, புதிய அரசியலமைப்பின் பெயரால் 13 ஆவது திருத்தச்சட்டத்தினை நீக்குவதன் மூலம் தமது திட்டத்தினை சூட்சுமமாக முன்னெடுப்பதற்கு அசராங்கம் காய்களை நகர்த்துகின்றது.

இவ்வாறான செயற்பாட்டின் மூலமாக இந்தியாவை பகைத்துக்கொள்ள வேண்டிய நிலைமையும் ஏற்படாது என்பதும் அரசாங்கத்தின் அரசியல் கணக்காக உள்ளது.

இந்நிலையில் புதிய அரசியலமைப்பினை உருவாக்கவுள்ளதாக கூறும் அரசாங்கம் 13ஆவது திருத்தச்சட்டம்சம்பந்தமாகவும், மா காண சபைகள் தொடர்பாகவும் தமது நிலைப்பாட்டினை பகிரங்கப்படுத்த வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-4)

# மனிதவுரிமை தொடர்பான விடயங்களை மேம்படுத்துவதற்கு ஐ.நாவுடன் ஒத்துழைத்து செயற்பட வேண்டும் - ரவூப் ஹக்கீம்

(கொழும்பு)

"மனித உரிமை தொடர்பான விடயங்களை மேம்படுத்துவதற்கு இலங்கை அரசு, ஐ.நா. மனித உரிமைகள் சபையுடன் ஆக்கபூர்வமாக ஒத்துழைத்துச் செயற்படுவதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும்" இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.



இலங்கை முஸ்லிம்களின் ஜனாஸா நல்லடக்கத்தை அனுமதிக்கும் வர்த்தமானி வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, கருத்துத் தெரிவிக்கும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தனிப்பட்ட நாடுகளில் மனித உரிமைகளைக் கடைபிடிப்பது தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையை, ஒருபோதும் குறைத்து மதிப்பிடப்படக்கூடாது.

ஜனாஸா விவகாரம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை மற்றும் இலங்கை மீதான பிரேரணையைக் கொண்டுவரும் பிரதான நாடுகளின் அறிக்கை ஆகியவற்றில் உள்ளடக்கப்பட்டதே. இது இந்த விடயத்தில் தீர்வு கிடைப்பதற்கு வழிவகுத்தது.

இலங்கை முஸ்லிம்களின் ஜனாஸா நல்லடக்க உரிமைக்குக் குரல் கொடுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி, தமிழ் முற்போக்குக் கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உட்பட அனைத்து அரசியல் கட்சிகளுக்கும், சிவில் சமூக அமைப்புகளுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நன்றி தெரிவித்துள்ளது.

ஐ.நா. அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்புக்கூறல், நீதி மற்றும் நல்லிணக்கம் தொடர்பான விடயங்களிலும் இலங்கை அரசு ஆக்கபூர்வமான ஈடுபாட்டைக் காட்ட வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-4)

## உலக வெப்பமயமாதலை கட்டுப்படுத்த உலக நாடுகள் தயாராக இருக்க வேண்டும்

# ஐ.நா. எச்சரிக்கை

(ஜெனீவா)

உலக நாடுகள் புவி வெப்பமடைதல் குறித்து சரியான நடவடிக்கைகளை எடுக்காது விட்டால் அடுத்த சில ஆண்டுகளில் உலக வெப்பமாதல் மேலும் 1.5 டிகிரி செல்சியஸ் உயரும் என தெரியவந்துள்ளது.

சர்வதேச அமைப்பினால் மேற்கொண்ட ஆய்விலிருந்து இது தெரியவந்துள்ளது.

இந்த சூழ்நிலையை உலகம் எதிர்கொண்டால், அது மோசமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

எனவே, உலக வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த உலகெங்கிலும் உள்ள நாடுகள் இனிமேல் தயாராக இருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது.

புவி வெப்பமடைதல் குறித்து விடுத்துள்ள எச்சரிக்கை உலகிற்கு பொது சிவப்பு எச்சரிக்கை என ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)



முல்லைத்தீவு - கள்ளப்பாடு அ.த.க. பாடசாலையில் கடந்த 2020ஆம் ஆண்டு, தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்த மாணவர்கள் அண்மையில் கௌரவிக்கப்பட்டனர். பாடசாலையின் அதிபர் நடராசா கருணாகரனின் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. (படம்:-தவசீலன்)

# விளையாட்டுத்துறையில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தி முன்னேற்றப் பாதையில் பயணிப்போம்-அங்கஜன்

**விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் முயற்சியில் எமது பிரதேசங்களில் விளையாட்டுத்துறையில் பல மாற்றங்கள் ஏற்பட்டு அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும் என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.**



நேற்று முன்தினம் யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டிக்கான ஆரம்ப நிகழ்வு மற்றும் வீரர்களை ஏலமெடுக்கும் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

எமது நாட்டிற்கு சிறந்த விளையாட்டுத்துறை அமைச்சராக நாமல் ராஜபக்ஷ கிடைத்துள்ளார். அவர் எமது வட பகுதியின் விளையாட்டுத் துறையை முன்னேற்றுவதற்காக முயற்சித்து வருகிறார். எமது இளைஞர் - யுவதிகளின் திறன்களை வளர்க்க எமக்கு உறுதுணையாக உள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் தற்போது 35 மைதானங்கள் புனரமைக்கப்படுகின்றன. அவற்றில் பல கரப்பந்தாட்ட மைதானங்களாகக் காணப்படுகின்றன. அதற்கு மேலதிகமாக 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கீட்டில் கிராமத்திற்கு ஓர் மைதானம் புனரமைக்கப்படவுள்ளது.

எமது மாவட்ட கரப்பந்தாட்ட வீரர்களின் வேண்டுகோளிற்கு அமைவாக யாழில் இரண்டு கடற்கரை கரப்பந்தாட்ட மைதானங்கள் உருவாக்கப்படுகின்றன. குறுகிய காலத்தில் எமது விளையாட்டுத்துறையில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டு முன்னேற்றப் பாதையில் பயணிப்போம்.

கரப்பந்தாட்ட விளையாட்டு முற்போக்கான சிந்தனைகளையும் ஒழுக்கத்தையும் இளைஞர்கள் மத்தியில் விதைக்க வல்லது என மேலும் அவர் தெரிவித்தார். (4-5-30)

# இந்துபுரம் பிறீமியர் லீக்; கிண்ணம் வென்றது முல்லை மெர்சல்




முல்லைத்தீவு - இந்துபுரம், பீனிக்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்திய இந்துபுரம் பிறீமியர் லீக், எனப்படும் மென்பந்து கிரிக்கட் சுற்றுத்தொடரில் முல்லை மெர்சல் அணியினர் கிண்ணத்தினைத் தமதாக்கிக்கொண்டனர்.

ஒவ்வொன்றிலும் வேறு விளையாட்டுக்கழக வீரர்கள் மூவர் உள்ளடங்கலாக, ஒவ்வொரு அணிக்கும் ஒன்பது வீரர்களைக்கொண்டதும் பத்துப் பந்துப் பரிமாற்றங்களைக் கொண்டதுமான கிரிக்கெட் சுற்றுத் தொடராக இந்துபுரம் பிறீமியர் லீக் அமைந்திருந்தது.

இந்நிலையில் இத்தொடரின் தகுதிகாண் போட்டிகளில் சிறந்த பெறுபேறுளைப் பெற்ற முல்லை மெர்சல் மற்றும் ஜெப்னா ஸ்டாலியன்ஸ் ஆகிய அணிகள் இறுதிப்போட்டிக்குத் தெரிவாகின.

அந்தவகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் ஜெப்னா ஸ்டாலியன்ஸ் மற்றும் முல்லை மெர்சல் ஆகிய அணிகள் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஜெப்னா ஸ்டாலியன்ஸ் அணியினர் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தனர்.

அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய முல்லை மெர்சல் அணியினர் நிர்ணயிக்கப்பட்ட 10 ஓவர்கள் நிறைவில், 5 விக்கெட்டுக்களை இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

துடுப்பாட்டத்தில் முல்லை மெர்சல் அணிசார்பில் அன்ரனி மற்றும் அருள்வெச்சி ஆகியோர் தலா 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் ஜெப்னா ஸ்டாலியன்ஸ் அணிசார்பில் ஜது 2 விக்கட்டுக்களை வீழ்த்தியிருந்தார்.

தொடர்ந்து 94 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய ஜெப்னா ஸ்டாலியன்ஸ் அணியினர் 9.3 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 70ஓட்டங்களை மாத்திரமே பெற்றுத் தோல்வியடைந்தனர்.

துடுப்பாட்டத்தில் ஜெப்னா ஸ்டாலியன்ஸ் அணிசார்பில் தஜி 28 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் முல்லை மெர்சல் அணிசார்பில் வினோஜன் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருந்தார்.

தொடர்ந்து வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் மற்றும் வெற்றிக் கிண்ணங்கள் என்பன வழங்கிவைக்கப்பட்டன. (4-281)

# இந்தியா-இங்கிலாந்து ஒருநாள் கிரிக்கெட் போட்டி

## ரசிகர்களுக்கு அனுமதி இல்லை



இந்தியா, இங்கிலாந்து கிரிக்கெட் அணிகளுக்கு இடையே 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை மகாராஷ்டிர மாநிலம் புனேயில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

மார்ச் 23, 26 மற்றும் 28 ஆகிய நாட்களில் போட்டிகள் நடைபெற உள்ளன. ஆனால், மகாராஷ்டிர மாநிலத்தில் கொரோனா பரவல் அதிகரித்து வரும் சூழலில் புனேயில் நடத்தப்படும் போட்டிக்கு ரசிகர்களை அனுமதித்தால்கொரோனா வைரஸ் பரவல் மேலும் அதிகரிக்கலாம் என்ற அச்சம் எழுந்தது.

இதனால், ரசிகர்கள் இன்றி நடத்த பி.சி.சி.ஐ.சார்பில் ஆலோசிக்கப்பட்டது. போட்டி நடத்தப்படும் இடத்தை மும்பைக்கு மாற்றலாம் என்ற தகவலும் வெளியானது.

இந்நிலையில், புனேயில் 3 ஒருநாள் போட்டிகளையும் ரசிகர்கள் இன்றி நடத்துவதற்கு மகாராஷ்டிர மாநில அரசு உத்தரவிட்டுள்ளது. மகாராஷ்டிர முதல்வர் உத்தவ் தாக்கரே, மகாராஷ்டிர கிரிக்கெட் சங்க தலைவர் விகாஸ் ககாட்கர் சந்திப்புக்கு பிறகு போட்டிக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தடுப்பு வழிகாட்டு நெறிமுறைகளின்படி வீரர்கள் மற்றும் பிற அதிகாரிகளுக்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்குமாறு முதல்வர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மகாராஷ்டிராவில் கொரோனாத் தொற்றின் தற்போதைய தீவிரத்தைக் கவனத்தில் கொண்டு, முதலமைச்சரின் அறிவுறுத்தலுக்கு பிறகு, பார்வையாளர்கள் இல்லாமல் போட்டிகளுக்கு அனுமதி வழங்க முடிவு செய்யப்பட்டதாக கிரிக்கெட் சங்கம் கூறியுள்ளது. (4)

# ஷானக்கவின் இடத்துக்கு மத்தியூஸ் நியமனம்



மேற்கிந்தியத்தீவுகளுடனான மூன்று போட்டிகள் இருபது-20 கிரிக்கெட் தொடருக்கான இலங்கை அணியின் ஸ்டாண்ட்-இன் தலைவராக அஞ்சலோ மத்தியூஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கையின் மேற்கிந்தியத்தீவுகள் சுற்றுப் பயணத்தின் இருபது-20 தொடரின் அணித் தலைவராக முன்னதாக தசூன் ஷானக்க நியமிக்கப்பட்டிருந்தார்.

எனினும் அமெரிக்க போக்குவரத்து விசாவை பெறுவதில் தாமதம் ஏற்பட்டமையினால், ஷானக்க இன்னும் அணியுடன் இணைந்து கொள்ளாத நிலைமையின் காரணமாகவே அஞ்சலோ மத்தியூஸ் இவ்வாறு அணியின் ஸ்டாண்ட்-இன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார் என்று தேர்வாளர்கள் கூறியுள்ளனர்.

இலங்கை அணியானது கடந்த வாரம் மேற்கிந்தியத் தீவுகளுக்கு புறப்படும்போது தசூன் ஷானக்க தனது செல்லுபடியாகும் கடவுச்சீட்டை இழந்ததன் காரணமாக இவ்வாறு விசா பெறுவதில் சிக்கல் நிலை ஏற்பட்டது.

விசா பிரச்சினைகள் தீர்க்கப்பட்டவுடன் அவர் அணியுடன் இணைந்து கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (4)

# கடந்த வருடம் 8 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகள் பதிவு

## எதிர்கால சந்ததியை பாதுகாக்கும் பொறுப்பு நம் கையில்

(கொழும்பு)

**இலங்கையில் கடந்த வருடம் 8 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகியுள்ளமை அதிர்ச்சியளிக்கிறது. இதை இல்லாதொழிப்பது நம் அனைவரினதும் கடமையாகும்**

பாடசாலை கல்வியைப் பெற்று எதிர்காலத்தை வளமாக்கிக்கொள்ள வேண்டிய சிறுவர்களின் வாழ்வில் துன்பியல் சம்பவங்கள் நடந்தேறுகின்றமை சர்வதேச நாடுகள் எதிர்நோக்கும் துரதிர்ஷ்டம் என கூறலாம். இலங்கையில் கடந்த வருடம் 8ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவான துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் வருடாந்த தரவறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு பகுதிகளிலும் கணிசமானளவு சம்பவங்கள் பதிவாகியுள்ளமையை அறிக்கையினூடாக அவதானிக்க முடிகின்றது.

நாட்டில் சிறுவர் பாதுகாப்பை உறுதிப்படுத்த 1929 என்ற துரித தொலைபேசி இலக்கம் பயன்பாட்டிலுள்ளது.

மும்மொழிகளிலும் வாரத்தின் எந்தவொரு தினத்திலும் எந்த நேரத்திலும் நாட்டின் எந்தப் பகுதியிலிருந்தும் "1929" இலக்கத்திற்கு மேற்கொள்ளப்படும் தொலைபேசி அழைப்புகள் இலவசமாகும்.

உங்கள் பிரதேசத்தில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் ஏதேனும் நடைபெற்றால் உடனடியாக 1929 எனும் இலக்கத்திற்கு அழைப்பினை மேற்கொண்டு முறைப்பாடுகளை பதிவு செய்யுங்கள்.

நாளைய தலைமுறையினரை ஆபத்தான நிலைகளில் இருந்து மீட்கும் பாரிய பொறுப்பும் கடமையும் சமூகம் என்ற வகையில் அனைவருக்கும் உரியதாகும். (நி-4)

# ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி 180 மில்.அமெ.டொலரை கடனாக வழங்க ஒப்புதல்

(கொழும்பு)

பீஜிங்கை தளமாகக் கொண்ட ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB) இலங்கைக்கு 180 மில்லியன் அமெரிக்க டொலரை கடனாக வழங்குவதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

கொவிட்-19 அவசர மற்றும் நெருக்கடி நிலைமை என்ற செயற்றிட்டத்தின் கீழ் குறித்த நிதியைக் கடனான வழங்குவதற்கு ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி முன்வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பீஜிங்கில் AIIB துணைத் தலைவர் டி.ஜே. பாண்டியனுடன் அண்மையில் நடைபெற்ற சந்திப்பின் போதே, இலங்கையின் தூதுவர் பாலித கோஹணவுக்கு இந்த முடிவு தெரிவிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி போன்ற திட்டங்கள் தனியார் துறையால் மேற்கொள்ளப்பட்டால், திட்ட செலவில் 35 சதவீதம் (AIIB ஆல்) ஈடுசெய்யப்படும்.

அதே நேரத்தில் இந்த திட்டத்தை ஒரு அரசு நிறுவனம் மேற் கொண்டால் குறித்த திட்டத் திற்கு AIIB, 80 சதவீதம் நிதியுதவி வழங்கும்.

இலங்கையின் லைட் ரயில் போக்குவரத்து திட்டத்திற்கு நிதியளிப்பதில் வங்கி மகிழ்ச்சியடைகிறது, இது நிதிப்பற்றாக்குறையால் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

மேலும் AIIB இன் ஊழியர்களில் இலங்கையர்கள் இல்லாததை தூதுவர் கோஹண குறிப்பிட்டார்.

ஆகவே குறித்த வங்கியில் உள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்க இலங்கையர்களை ஊக்குவிக்குமாறு நிதி அமைச்சகத்தை வலியுறுத்தியுள்ளேன்" என அவர் குறிப்பிட்டுள்ளார்.(நி-4)

# 16 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

கொட்டாவ - கலவிலபுர பகுதியில் கஞ்சா மற்றும் ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிடைத்த தகவலுக்கமைய குற்றத்தடுப்பு பிரிவினரால் நேற்று முன்தினம் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டிருந்தது.


இதன்போது 16 கிலோ 777 கிராம் கஞ்சா மற்றும் 54 கிராம் 400 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வீரவில பகுதியைச் சேர்ந்த 24 வயதான இளைஞர் ஒருவரே போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-4)



புலவர்மணி வை.க. சிற்றம்பலம் எழுதிய இணுவில் சிவகாமியம்மை பிள்ளைத்தமிழ் என்ற நூலின் வெளியீட்டு நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை திருநெல்வேலியில் உள்ள சிவராமலிங்கம்பிள்ளை நினைவு அறிவாலயம் அரங்கில் இடம்பெற்றது. யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு தமிழ்ச்சங்கத்தின் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமை தாங்கினார்.

# இந்தியாவுடனான உறவை பலப்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்



**சாணக்கியன்**

(கொழும்பு)

இந்தியாவுடனான தமிழ் மக்களின் உறவை பலப்படுத்துவதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டுமென தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இலங்கையின் தீர்வு விடயத்தில் பாரிய பங்களிப்பை இந்தியா வழங்குமென அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் இந்த விடயத்தில் பூகோள அரசியலையும் கவனத்தில் கொள்ள வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-4)

31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 31.01.2021 அன்று இறைபதமெய்திய கம்பர் மலையை பிறப்பிடமாகவும் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பத் தலைவி

அமரர் வல்லிபுரம் சிவபாக்கியம்
(துரையர்)

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (01.03.2021) திங்கட்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். நாளை (02.03.2021) செவ்வாய்க்கிழமை வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் மு.ப.11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள், தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தொண்டமான் நகர்,
55 ஆம் கட்டை, கிளிநொச்சி.

கண்ணன்



29ஆம் ஆண்டு நினைவஞ்சலிகள்

அமரர்
இராசையா செல்வராசா
(இளைப்பாறிய ஆசிரியர்)

துதியை : 01.03.2021

மலர்வு 18.06.1920
உதிர்வு 19.02.1992

ஆண்டுகள் இருபத்து ஒன்பது
ஆனாலும் உங்கள் நினைவுகள்
என்றும் பசுமையானவை.
உங்கள் உன்னதமான ஆத்மா
சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

"சுபசதனம்"
செம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(5945)

உங்கள் குடும்பத்தினர்
பேராசிரியர்
மா.சின்னத்தம்பி (மருமகன்)



# பரீட்சைக்குரிய ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி

## இறுக்கமான சுகாதார நடைமுறைகளுடன் மாணவர்கள் அனுமதி

(நல்லூர்)

**யாழ்.மாவட்டத்தில் க.பொ.த.சாதாரண பரீட்சைக்குரிய ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ள அதே வேளை இறுக்கமான சுகாதார நடைமுறைகளை பின்பற்றி பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்படுவார்கள் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.**

இன்று கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சை ஆரம்பமாகவுள்ள நிலையில் யாழ். மாவட்ட நிலைமை தொடர்பில் நேற்று கருத்துரைக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் தற்போது சிறைச்சாலையில் கைதிகள் உட்பட 59 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் யாழ்.மாவட்டத்தில் 249 பொதுமக்களுக்கும் 51 சிறைச்சாலை கைதிகளுக்குமாக மொத்தமாக 300 பேருக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலைமை காணப்படுகின்றது. 191 பேர் பூரண சுகமடைந்து வீடு திரும்பி உள்ளனர்.

இந்த நிலையிலே 513 குடும்பங்களைச் சேர்ந்த 987 நபர்கள் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

தற்போதைய நிலையில் பொதுமக்கள் மிக மிக அவதானமாக இருப்பது முக்கியம். முதலில் வெளி மாவட்டத்திலிருந்து வருகின்றவர்களால் மாத்திரமே தொற்று பரவுவதாகக் கருதப்பட்டது.

எனினும் தற்போது யாழ். மாவட்டத்தில் உள்வர்களால் தொற்று உறுதி செய்யப்படுகின்ற நிலையானது மிகவும் அபாயகரமான நிலையாக காணப்படுகின்றது.

இன்றையதினம் கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சை நாடுபூராகவும் ஆரம்பமாகும் நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்தை பொறுத்தவரைக்கும் சுமார் 18 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பரீட்சார்த்திகள் பரீட்சையில் தோற்றவுள்ளனர்.

பரீட்சைக்குரிய சகல ஏற்பாடுகளும் கல்வித்திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இருந்தபோதிலும்தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ள மாணவர்களுக்கு பரீட்சை எழுதுவதற்கான விசேட நிலையங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தற்போதுள்ள நிலைமையை உணர்ந்து மாணவர்கள் தங்களை பரீட்சைக்கு தயார்படுத்தி சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். அத்தோடு அங்கு கடமை புரிகின்ற ஆசிரியர்கள் மற்றும் சுகாதாரப் பிரிவினர்கள் அவர்களுக்குரிய வழிகாட்டல்களை முன்னெடுப்பார்கள் என மேலும் தெரிவித்தார். (5-4-33)

# இறக்குமதியை தடை செய்யாவிட்டால் ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடைந்திருக்கும்



(நல்லூர்)

நாட்டில் இறக்குமதியை இடைநிறுத்தாது விட்டால் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி 300 ரூபாயாக வீழ்ச்சி கண்டிருக்கும் என இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தினை மேற்கொண்டுள்ள நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் யாழ்ப்பாணத்தில் முதலீடுகள் மற்றும் கடன் வசதிகள் சம்பந்தமாக கலந்துரையாடல் ஒன்றினை நடத்தியிருந்தார்.

நேற்றுமுன்தினம் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரூபாயின் பெறுமதி பெருமளவில் வீழ்ச்சியடைந்திருந்தால் நாட்டில் பெரும்பாலான இறக்குமதியாளர்கள் இறக்குமதியைக் கைவிடவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்.

வடக்கு மாகாணத்திலிருந்து தங்கக் கடத்தலைத் தடுக்க தங்கம் மீதான வரியை இந்தியா போன்று பராமரிக்க வேண்டும்.

மேலும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் பூங்காக்களை அமைக்க முன்வரும் முதலீட்டாளர்களுக்கு நீர் நிலைகளை அண்டிய பிரதேசங்களில் 15 தொடக்கம் 20 ஏக்கர் காணியை வழங்க அரசு தீர்மானித்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

குறித்த கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத்தலைவர் அங்கஜன் இராமநாதன், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் மற்றும் அமைச்சின் செயலாளர், மத்திய வங்கி அதிகாரிகள், பிரதேச அரச, தனியார் வங்கிகளின் முகாமையாளர்கள், முதலீட்டாளர்கள், தனியார் வைத்தியசாலை பணிப்பாளர், பனை அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள், அச்சுவேலி கைத்தொழில் பேட்டை நிர்வாகத்தினர் மற்றும் துறைசார் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (5-4-33)

# வர்த்தகர் சங்கத்திற்குள் அரசியல் இருக்கக் கூடாது

(குப்பிழான்)

நகரத்தில் வர்த்தகர் சங்கம் ஒன்று இருக்குமாயின் பல்வேறு பிரச்சினைகளுக்கும் இலகுவில் தீர்வு காண முடியும். மருதனார்மடம் வர்த்தகர் சங்கத்திற்குள் அரசியல் இருக்கக் கூடாது.

அந்த வகையில் நடுநிலையாக நின்று செயற்படுபவர்கள் நிர்வாகத்திற்குள் உள்வாங்கப்பட வேண்டுமென வலி. தெற்குப் பிரதேச சபையின் தவிசாளர் க.தர்ஷன் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற மருதனார்மடம் வர்த்தகர் சங்கத்தின் அங்குரார்ப்பண நிகழ்வின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உடுவில் பிரதேச செயலக பிரிவில் ஏற்கனவே சுன்னாகம் வர்த்தகர் சங்கம் இயங்கி வருகின்றது. எனினும், மருதனார்மடமும் சுன்னாகத்திற்கு நிகராக வளர்ச்சி பெற்று வருவதால் மருதனார்மடம் வர்த்தகர் சங்கம் தனித்து இயங்குவது சிறப்புடையது என அண்மையில் இடம்பெற்ற உடுவில் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் மருதனார்மடம் வர்த்தகர் சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றுப் பாதிப்பால் மருதனார்மடம் சந்தை வர்த்தக நடவடிக்கைகளில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டது.

இதனை மீளவும் கட்டியெழுப்புவதற்கு நாங்கள் அனைவரும் கடுமையாக உழைக்க வேண்டியுள்ளது.

மருதனார்மடம் வர்த்தகர் சங்கம் அங்குரார்ப்பணம் மூலம் மருதனார்மடத்தில் விரைவில் மாற்றம் ஒன்று உருவாக வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (5-4-18)






தாவளை சைவத்தமிழ் வித்தியாலயத்தின் மாணவர்களுக்கான கௌரவிப்பு, தாவளை சைவத்தமிழ் வித்தியாலயத்தின் தரம் 5 புலமைப் பரிசு பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு கடந்த வியாழக்கிழமை மேற்படி வித்தியாலய மண்டபத்தில் வகுப்பாசிரியர் திருமதி.ச.புவீந்திரன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு இங்கிலாந்து இரத்தினம் அறக்கட்டளை நிறுவனத்தினரும் கனடா சித்தன்கேணி ஒன்றியத்தினரும் நிதிப்பங்களிப்பு வழங்கினர்.

# சங்கடஹர சதுர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண் வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் மாசி மாத சங்கடஹர சதுர்த்தி விரதத்தை முன்னிட்டு நாளை 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு அபிஷேகமும் தொடர்ந்து மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்ட பூஜை என்பன நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதி வலம் வருதலும் இடம்பெறவுள்ளது. (5)



நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி 2020 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவன் கேசவனுக்கு நோர்வேயில் வாழும் பழைய மாணவர் த.ரவீந்திரனால் துவிச்சக்கரவண்டி அன்பளிப்பாக அண்மையில் வழங்கப்பட்டது.

# JOB வேலை வாய்ப்புகள்

## கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கம் (வ-து) கரவெட்டி

**பதவி வெற்றிடம்**

01.பதவி:- களஞ்சிய முகாமையாளர் வெற்றிடம் 02
சம்பள குறியீட்டு இலக்கம் 208.14
சம்பள அளவுத்திட்டம்: 15960-135*10-145*10-18760

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ) கூட்டுறவுப் பணியாளர் 15 ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறை பதவியொன்றை இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 16 ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரண தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த. (சாதாரண தரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண் கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 6 பாடங்களில் சித்தி.

02.பதவி:- களஞ்சிய முகாமையாளர் வெற்றிடம் 01
சம்பள குறியீட்டு இலக்கம்: 208/15
சம்பள அளவுத்திட்டம்: 15545-130*10-140*10-18245

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ) கூட்டுறவுப் பணியாளர் 16 ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறை பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 17 ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரண தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த. (சாதாரண தரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 6 பாடங்களில் சித்தியும் தொடர்புபட்ட துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

03.பதவி:- களஞ்சிய முகாமையாளர் வெற்றிடம் 03
சம்பள குறியீட்டு இலக்கம்: 208/16
சம்பள அளவுத்திட்டம்: 15135-120*10-135*10-17685

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ) கூட்டுறவுப் பணியாளர் 17 ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரண தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த. (சாதாரண தரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தி.

கட்டைவேலி நெல்லியடி பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில் ஆளணி அங்கீகாரப்படி மேற்படி பதவிகளுக்கு வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1) வயது 18 - 45 வரை
2) சங்க பணியாளர்களுக்கு வயது எல்லை கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.
3) சங்கப் பணியாளர்கள் தங்கள் சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும்.
4) சங்க எல்லை பரப்பிற்குள் வசிப்போருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
5) கூட்டுறவு சங்கத்தில் வேலை அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
6) தகுதியானவர்கள் தங்கள் விண்ணப்பப் படிவங்களை சுயமாக தயாரித்து 15.03.2021 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர் கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கம், கரவெட்டி என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்க வேண்டும்.

தலைவர்
கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கம், கரவெட்டி.
021 226 3263

(C-1544)

## NORTHSEA LTD

(A Company Functioning under the Ministry of Fisheries)

### VACANCIES

**01. Post of Factory Manager**

| | |
|---|---|
| Number of Vacancies | - 03 |
| Locations | - Lunuwila, Weerawila & Jaffna |
| Salary Scale | - MM 1-1 2016- Grade II -53,175 - 10x1375 -15x 1910- 95,575/- |
| Age | - Age should be not less than 22 years and not more than 45 years. The upper age limit will not apply to the internal candidates. |

**Qualifications & Experience**
**External candidate (1 or 2 Below)**

1. A degree in the field of B.Sc. Engineering (Mechanical) recognized by the U.G.C
And
A Minimum of one year post qualifying experience in the relevant field to the post, after obtaining the first degree.
2. Having passed the Intermediate Examination of a recognized professional Engineering Institute of which the subject area is relevant to the post and a minimum one year post qualifying experience in the relevant field to the post.

**Internal Candidate (1 or 2 below)**

1. Having obtained the qualifications required by the external candidates above.
2. Completion of minimum of 5 years satisfactory service in a post in the Junior Manager Category (JM 1-1) in the subject area relevant to the Post.

**Nature of the Appointments**
The above post shall be on a permanent basis subject to a three-year probation period with entitlement to EPF & ETF.

**General Conditions**

- Applications are invited from citizens of Sri Lanka who are physically and mentally fit to discharge the duties with excellent moral.
- Candidates who are employed in Government Departments /state corporations/ statutory Boards should forward their applications through relevant Heads of the Institution.
- Applicants who come from Mechanical Engineering background are preferred.

Applications should be sent with their full bio data with contact details of two non-related referees along with the educational /professional qualifications with previous work experience by registered post on or before **15th March 2021** and indicate the post applied for on the top left-hand corner of the envelop, addressed to The Chairman, Northsea Ltd, No.450, D.R. Wijewardana Mawatha, Colombo 10.

**Chairman**
**Northsea Ltd**

(C-1220)

## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1990 இந்து நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: செவ் 10 சூரி 9 இல்<br>உயரம்: 6'2"<br>தகைமை/தொழில்: **A/L, HNDA,Hotel mana gement, Work – Hotel Accou ntant**<br>எதிர்பார்ப்பு: அரச,தனியார் தொழில், வெளி, உள் நாடும் எதிர்பார்க்கப்படுகிறது.<br>தொ.இ: **B/11515** | பிறப்பு: 1996 இந்து நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: செவ் 9 சூரி 10 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: **HR Diploma,** அரச வங்கி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: **Doctor, Engineer,** உள் நாடு மட்டும்<br>தொ.இ:**G/11564** |
| பிறப்பு:1990 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: செவ் 11 சூரி 8 இல்<br>உயரம்: **170cm**<br>தகைமை/தொழில் : **BTEC, Q.S, Civil engineer, WORK –Cashier Private**<br>எதிர்பார்ப்பு:இலங்கையில் பிறந்து வெளி நாடு சென்ற மணமகள், விசா தேவை<br>தொ.இ: **B/11518** | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 11 செவ் 6 சூரி 5 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: **MBBS** (மருத்துவபீட இறுதியாண்டு)<br>எதிர்பார்ப்பு: **Doctor, Engineer,** உள்நாடு மட்டும்<br>தொ.இ:**G/11567** |
| பிறப்பு:1991 இந்து நட்சத்திரம்:உத்தரம்<br>கி.பா:செவ் 12 சூரி 9 இல்<br>உயரம்:5.3<br>தகைமை/தொழில்: **HND,** அரச உதவிப் பண்ணை முகாமையாளர்<br>எதிர்பார்ப்பு: படித்த அழகிய பெண், உள் நாடும் வெளிநாடும் விரும்பத்தக்கது.<br>தொ.இ: **B/11520** | பிறப்பு:1990 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா:செவ் 6 சூரி 8 இல்<br>உயரம்:**155cm**<br>தகைமை/தொழில்:**HNDE Engineer, Work- (G.O.V) T.O Technical Officer**<br>எதிர்பார்ப்பு: **T.O, Engineer, Banker**<br>தொ.இ:**G/11570** |
| பிறப்பு:1983 கிறிஸ்தவம்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: **G.C.E A/L,B.B.A Work** தனியார் வங்கி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: உத்தியோகமுள்ளபெண்<br>தொ.இ: **B/11522** | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 28 செவ் 8 சூரி 9 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: **HNDA**<br>எதிர்பார்ப்பு: தனியார், அரச தொழில், வங்கி<br>தொ.இ:**G/11572** |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# 100 மில்லியன் ரூபாய் செலவில் முல்லையில் கடற்றொழில் அபிவிருத்தி

(பனிக்கன்குளம்)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்றொழில்சார் அபி விருத்தி செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு சுமார் 100 மில்லியன் ரூபாய் நிதி பயன்படுத்த முடியும் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.**

முல்லைத்தீவு மாவட்டத்திற்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள கடற்றொழில் அமைச்சர், மாவட்டத்தின் பல்வேறு சமூக அமைப்புக்களையும் சந்தித்து மாவட்டத்தின் நிலவரங்கள் தொடர்பாக கலந்துரையாடினார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் கடற்றொழிலாளர் பிரதிநிதிகளுடன் இடம் பெற்ற கலந்துரையாடலின் போது குறித்த விடயத்தினை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடற்றொழில் மற்றும் நீர்நிலைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற மீன்பிடிச் செயற்பாடுகளை சட்ட விதிமுறைகளுக்கு அமைய ஒழுங்குபடுத்துவதுடன், அதிகளவான வருமானத்தை தரக்கூடிய தொழில் முறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலமும் கடற்றொழில் சமூகத்தினருக்கு சிறந்த வாழ்க்கைத் தரத்தினை உருவாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வடக்கு- கிழக்கு மக்களுக்கு நிரந்தரமான, தரமான பொருளாதார கட்டமைப்பை உருவாக்கும் நோக்கில் முதலீடுகளை மேற்கொள்ள முன்வருமாறு புலம்பெயர் உறவுகளுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்ட நிலையில், முல்லைத்தீவு கடற்றொழிலாளர்களின் தொழில்சார் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தக் கூடியவாறு சுமார் 100 மில்லியன் ரூபாய்களை கொடையாளர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

குறித்த கலந்துரையாடலில் மாவட்டத்தில் காணப்படும் கரைவலைத் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், அளவிற்கு அதிகமான வெளிமாவட்ட கடற்றொழிலாளர்களுக்கு முல்லைத்தீவு கடற்பரப்பில் தொழிலில் ஈடுபடுவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளமை, வெளிமாவட்டத்தை சேர்ந்தவர்களின் சட்ட விரோத நடவடிக்கைகள், கொக்குளாய் களப்பு பிரதேசத்தில் தடை செய்யப்பட்ட தொழில் முறைகளைப் பயன்படுத்துதல், நந்திக்கடல் அபிவிருத்தி உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டன.



கரைவலைத் தொழிலை மேற்கொள்வதற்கான இடங்களை அடையாளப்படுத்தும் வேலைகளை விரைவில் பூரணப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்திய கடற்றொழில் அமைச்சர், குறித்த தொழில் தொடர்பான விதிமுறைகளுக்கு அமைய தரவுகளை ஆராய்ந்து உரியவர்களுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார். (5-4-281)

## நிர்வாகசபை தெரிவு

(நெளுக்குளம்)

வவுனியா பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் வருடாந்த பொதுச்சபைக் கூட்டமும் நிர்வாகசபைத்தெரிவும் அண்மையில் இடம் பெற்றது.

அந்தவகையில் தலைவராக வீ.ஜெகசோதிநாதனும், உபதலைவராக பா.பாலேந்திரனும் தெரிவு செய்யப்பட்டார்.

அத்துடன் இயக்குநர் சபை உறுப்பினர்களாக மா.சிவகுமார், வே.தயாநந்தன். நா.நாகேந்திரன், செ.மயூரன், மு.துரைராசா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (5-4-299)




# வைத்தியரை நியமிக்குமாறு மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு அம்பலவன் பொக்கணை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வைத்தியரை நியமிக்க வேண்டும் அல்லது நடமாடும் வைத்திய சேவை நடத்தப்பட வேண்டும் என மாத்தளன், அம்பலவன் பொக்கணை, வலைஞர்மடம் ஆகிய கிராமங்களின் மக்கள் முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இக்கிராமங்களில் 450 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன.

இப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் முல்லைத்தீவு பொது வைத்தியசாலை, புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலைகளுக்கு செல்கின்றனர்.

இக்கிராமங்களுக்கு 2009 ஆம் ஆண்டிற்கு பின்னர் பேருந்து சேவைகள் இடம் பெறுவதில்லை. போக்குவரத்து நெருக்கடியினை இப்பகுதி மக்கள் சந்திக்கின்றனர்.

இந்நிலையில் அம்பலவன் பொக்கணை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வைத்தியரை நியமியுங்கள் அல்லது மாத்தளன், அம்பலவன்பொக்கணை, வலைஞர்மடம் ஆகிய கிராமங்களில் நடமாடும் வைத்திய சேவையினை நடத்துங்கள் என சுகாதார பணிப்பாளர் கோரிக்கை விடுத்துள்ளார். (5,4,350)

# ஒருங்கிணைப்புக்குழுவின் தீர்மானத்தை மீறி இடம்பெறும் மணல் அகழ்வுகள்

(மன்னார்)

கடந்த வாரம் இடம் பெற்ற நானாட்டன் பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் உயர்மட்ட குழுவினரால் மாவட்ட ரீதியில் இடம்பெறும் மணல் அகழ்வுகளை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதுடன் மணல் அகழ்வு மற்றும் அனுமதி தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தியதன் பின்னர் கட்டாய தேவைகளுக்கான மணல் அகழ்வுகளுக்கு மாத்திரம் அனுமதி வழங்குவதாக தீர்மானிக்கப்பட்டது.

குறித்த தீர்மானத்திற்கு அமைய மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர், மடு, மாந்தை, முசலி ஆகிய பிரதேச செயலகங்களுக்கான மணல் அகழ்வு அனுமதிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் நானாட்டான் பிரதேச செயலக அனுமதியுடன் நானாட்டான் பிரதேச செயலக பிரிவில் மாத்திரம் தற்போது வரை மணல் அகழ்வு இடம் பெற்று வருவதாக பொது மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

அதே நேரத்தில் பிரதேச செயலக ஒருங்கிணைப்பு கூட்டங்களில் பெரும்பாலும் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் வெறுமனே தீர்மானங்களாகவே எழுத்துக்களில் காணப்படுவதாகவும் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை எனவும் பொது மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

எனவே மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவினர் குறித்த விடயம் தொடர்பில் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-285)

# இரு குளங்களையும் அபிவிருத்தி செய்யுமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்

(அக்கராயன்)

பூநகரியின் இரு நீர்ப்பாசனக் குளங்களை முழுமையாக அபிவிருத்தி செய்யுங்கள் என குளங்களின் கீழான விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பூநகரியின் கரியாலை நாகபடுவான்குளம், குடமுருட்டிக் குளம் நீர்ப்பாசனக் குளங்களாக காணப்படுகின்ற போதிலும் இக்குளங்கள் முழுமையாக அபிவிருத்தி செய்யப்படாமல் காணப்படுகின்றன.

குளங்களின் அணைக் கட்டுகள் நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் காணப்படுகின்ற அதேவேளை மழை காலத்தில் மண் மூடைகள் அடுக்கி குளத்தினை விவசாயிகள் பாதுகாத்தும் வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்திலேயே மழை காலத்தில் வேகம் குறைந்து நீர் நிரம்புகின்ற



குளமாக கரியாலை நாகபடுவான்குளம் காணப்படுகிறது.

முல்லைத்தீவின் அம்பலப்பெருமாள்குளம், கோட்டைகட்டியகுளம், ஐயன்கன்குளம், பழையமுறிகண்டிக்குளம் ஆகிய குளங்களின் நீர் வன்னேரிக் குளத்தினை நிரப்பி மண்டைக் கல்லாறு வழியாக பூநகரி கடலைச் சென்றடைகிறது.

பூநகரி கடலினைச் சென்றடையும் நீரினை கரியாலை நாகபடுவான் குளத்திற்கு திருப்பி விடுகின்ற வழிவகைகள் உருவாக்கப்பட வேண்டும் என நீண்ட காலமாக விவசாயிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

அக்கராயன் ஆறு வழியாக குடமுருட்டிக்குளம் நிரப்பப்பட்டாலும் குளத்தின் அணைக்கட்டு அபிவிருத்தி செய்யப்படாததன் காரணமாக குளத்தில் கூடுதலான நீரை தேக்கி வைக்க முடியவில்லை.

குடமுருட்டிக்குளத்தினை ஆழமாக்கி அணைக்கட்டினை பலப்படுத்துவதன் மூலம் குளத்தில் கூடுதலான நீரினை சேமிக்க முடியும் என குட முருட்டி விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (5,4,350)

# களப்பு பகுதியை ஆழப்படுத்துமாறு மீனவர்கள் கோரிக்கை

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வட்டுவாகல் களப்பில் மீன்பிடி தொழிலில் ஈடுபடும் பல்லாயிரக்கணக்கான குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வட்டுவாகல் களப்பை ஆழப்படுத்தி தருமாறு மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது இறால் சீசன் ஆரம்பித்துள்ள நிலையில் வட்டுவாகல் பகுதியில் அதிகளவான மீனவர்கள் தமது வீச்சு வலை தொழிலை செய்ய ஆரம்பித்துள்ளனர்.

ஆனாலும் இந்த களப்பு ஆழப்படுத்தாத காரணத்தினால் இறால் பிடிபடும் அளவில் பாரிய வீழ்ச்சி காணப்படுவதாகவும் எனவே சம்பந்தப்பட்ட தரப்புக்கள் எமது வாழ்வாதாரத்தில் அக்கறை கொண்டு விரைவில் இதற்கான தீர்வினை வழங்க வேண்டும் என கோரி நிற்கின்றனர்.

இந்நிலையில் மூன்று நாள் விஜயமாக முல்லைத்தீவு வந்து மீனவர்களை சந்தித்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வட்டுவாகல் ஆழமாக்கல் பணி விரைவில் இடம்பெறும் எனவும் குறித்த வட்டுவாகல் களப்பில் இறால் குஞ்சுகள், மீன் குஞ்சுகள் விடுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு விரைவில் மீனவ மக்களது வாழ்வாதாரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

(5-4-281)

# இராசிபலன்

01.03.2021
மாசி 17, திங்கட்கிழமை
துதியை முற்பகல் 11.20 மணிவரை
உத்தரம் முற்பகல் 10.09 மணிவரை
சுபநேரம் 12.28-1.58 மணிவரை
இராகுகாலம் 7.58-9.28 மணிவரை
சந்திராஷ்டமம்:- பூரட்டாதி

வளவன்


மேஷம்

கலகலப்பான செய்திகள் காலைப் பொழுதே வந்து சேரலாம், இனிய நோக்கத்தோடு பழகியவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், தேகநலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், போசன சுகமுண்டு.


ரிஷபம்

மனமகிழ்ச்சியோடு செயற்படுவீர்கள், பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பாராட்டும் புகழும் கூடும் நாள்.


மிதுனம்

நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சுப விரயங்கள் கூடும் நாள்.


கடகம்

கூட்டு முயற்சிகள் முன்னேற்றம் தரும், குடும்பத்தினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், புதிய நபர்கள் அறிமுகம் கிடைக்கும், போசன சுகமுண்டு.


சிம்மம்

புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் வாய்ப்புண்டு.


கன்னி

விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கி சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.


துலாம்

நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம், மனச்சஞ்சலங்கள் சற்று அதிகரிக்கும்.


விருச்சிகம்

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், காரிய அனுகூலமுண்டு.


தனுசு

கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், குடும்ப ஒற்றுமை கூடும், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.


மகரம்

குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.


கும்பம்

கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள், குடும்ப பொறுப்புக்கள் அதிகரிக்கும் நாள்.


மீனம்

நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், உறவினர்களின் சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

அன்னதானத்திற்கு நிகர் என்ன தானம் உள்ளது.

# மத உரிமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் அரசின் தீர்மானம் வரவேற்கத்தக்கது

## பேராசிரியர் திஸ்ஸ



(கொழும்பு)

கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தினால் உயிரிழப்பவர்களின் உடலை அடக்கம் செய்ய அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளமை வரவேற்கத்தக்கது.

அனைத்துக் காரணிகளையும் அரசியல் கோணத்தில் நோக்கினால் முரண்பாடுகள் மாத்திரமே தோன்றும். இனங்களுக்கிடையில் தேசிய நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த புதிய அரசியலமைப்பில் சிறந்த பொறிமுறை அறிமுகப்படுத்த வேண்டும் என லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

நிகழ்கால அரசியல் நிலவரம் குறித்து வினவிய போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கொவிட் - 19 வைரஸ் தொற்றினால் உயிரிழப்பவர்களின் சடலங்களை சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளுக்கு அமைய அடக்கம் செய்ய முடியும்.

சடலத்தை அடக்கம் செய்வதற்கு எதிராக ஒரு தரப்பினர் தவறான நிலைப்பாட்டை சமூகத்தின் மத்தியில் தோற்றுவித்து அதனூடாக அரசியல் செய்தனர்.

கொவிட் - 19 வைரஸ் தொற்றினால் உயிரிழப்பவர்களின் உடல்கள் தகனம் செய்வதற்கு முஸ்லிம் சமூகத்தினர் கடுமையான எதிர்ப்பை ஆரம்பத்திலிருந்து வெளிப்படுத்தினார்கள்.

அவர்களின் மத உரிமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டியது கட்டாயமாகும். பல்வேறு போராட்டங்களின் பின்னர் முஸ்லிம் மக்களுக்கு நீதி கிடைத்துள்ளது. தொற்றினால் உயிரிழப்பவர்களின் உடல்களை அடக்கம் செய்ய காலம் கடந்தாவது அனுமதி வழங்கியுள்ளமை வரவேற்கத்தக்கது.

அனைத்து காரணிகளையும் அரசியல் கோணத்தில் பார்த்து ஒருபோதும் தீர்வைப் பெற முடியாது. ஒரு தரப்பினரது தவறான அபிப்பிராயங்கள் அனைத்துப் பிரச்சினைக்கும் மூல காரணியாகக் காணப்பட்டது. பல்லின சமூகம் வாழும் நாட்டில் அனைத்து இன மக்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும்.

தேசிய நல்லிணக்கம் கட்டியெழுப்பப்பட்டால் மாத்திரமே நாடு அனைத்து துறைகளிலும் முன்னேற்றமடையும். அரசியல் காரணிகளினால் முரண்பாட்டுக்குட்பட்டுள்ள தேசிய நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை புதிய அரசியலமைப்பின் ஊடாக முன்னெடுக்க வேண்டும் என்று ஆலோசனை வழங்கியுள்ளேன் என அவர் தெரிவித்தார். (நி-4)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அறிக்கையினை விமர்சனத்திற்குள்ளாக்குவது தவறு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டை ஏற்க முடியாது. மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை பாதுகாத்துக்கொள்ள உண்மையினை மூடி மறைக்க வேண்டிய தேவை கிடையாது. குண்டுத்தாக்குதலுக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முழுப் பொறுப்பினை ஏற்க வேண்டும் என அன்றும் குறிப்பிட்டோம், இன்றும் குறிப்பிடுகிறோம். இதில் எவ்வித மாற்றமும் கிடையாது என சமுர்த்தி, மனைபொருளாதாரம், தொழிலபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், நல்லாட்சி அரசாங்கத்தில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான முரண்பாடுகள் தேசிய பாதுகாப்பை பலவீனப்படுத்தியது. அரச தலைவர்களின் முரண்பாட்டை அடிப்படைவாதிகள் தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டார்கள். அரசாங்கத்தின் பொறுப்பற்ற செயற்பாட்டினால் அப்பாவி மக்கள் பலியானார்கள்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2019 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் அமைத்தார். ஆணைக் குழுவினர் சுயாதீனமாகவே விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுத்து கடந்த மாதம் ஜனாதிபதியிடம் அறிக்கை சமர்ப்பித்துள்ளார்கள்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பிலான விசாரணை அறிக்கை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பழிவாங்கும் வகையில் அமைந்துள்ளது. ஆகவே அறிக்கையை ஏற்க முடியாது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. அறிக்கையினை விமர்சனத்துக்குள்ளாக்குவது தவறான செயற்பாடாகும்.

பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தின் ஒரு பங்காளிக் கட்சியாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளது. அரசாங்கத்தின் வசமுள்ள மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பாதுகாத்துக் கொள்ள உண்மைக்கு புறம்பாக செயற்பட வேண்டிய அவசியம் கிடையாது. ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதலுக்கு சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன பொறுப்புக்கூற வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-4)

# மக்களுக்கு முன் தடுப்பூசியை பெற்றுக் கொண்ட ஆட்சியாளர்கள்

## சஜித் குற்றச்சாட்டு



(கொழும்பு)

தமக்கு நாடே முதன்மையானது என மார்தட்டிக் கொண்ட ஆட்சியாளர்கள், கொவிட்-19 தடுப்பூசியை பொதுமக்களுக்கு வழங்கும் முன்னர் தாம் செலுத்திக்கொண்டனர் என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

தெஹிவளையில் நேற்று முன்தினம் நடைபெற்ற எதிர்க் கட்சியின் நடமாடும் சேவையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் கொவிட்-19 தடுப்பூசியை செலுத்திக்கொண்டமை தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமது பாதுகாப்பை மாத்திரம் சிந்தித்து செயற்படுவதற்கு பதிலாக முழு நாட்டு மக்களை கொவிட்-19 வைரஸிடமிருந்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுப்பதாகவும் எதிர்க் கட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)




# முட்டாள் காவலாளி

சந்தனபுரி என்ற நாட்டை சிற்றரசன் ஒருவன் ஆட்சி செய்து வந்தான். விசாகன் என்ற காவலாளி, அரண்மனையில் வாயில் காப்போனாகப் பணிபுரிந்து வந்தான். அவன் அரசனிடம் மிகுந்த விசுவாசம் கொண்டிருந்தான்.


அரசனைக் கொல்ல வந்த சில ஒற்றர்களை, அவன் மிகவும் துணிவுடன் விரட்டி அடித்திருக்கிறான். சிலரைக் குத்திக் கொன்று, அரசனைக் காப்பாற்றியிருக்கிறான். அவனுடைய ராஜ விசுவாசத்தை அறிந்த அரசன், அவனுடைய ஏழ்மை நிலையைப் போக்கக் கருதினான்.

ஒருநாள், பாத்திரம் நிறைய பொன்னும், மணியும் போட்டு, அதை இறுக மூடி, காவலாளி வீட்டுக்குச் செல்லும்போது, அவனுக்குப் பரிசாகக் கொடுத்தான் அரசன்.

அதைப் பெற்றுக்கொண்டு காவலாளி வீட்டுக்குச் செல்லும்வழியில், ஒரு துறவி, ஒரு பொன்னைக் கொடுத்துவிட்டு, அவனிடமிருந்த பாத்திரத்தைப் பெற்றுக் கொண்டான். பாத்திரத்தில் இருந்தது என்ன என்பது அவனுக்குத் தெரியாததால், ஒரு பொன்னை பெரிதாக நினைத்து மகிழ்ந்தான். அந்தப் பாத்திரத்தை துறவி, அரசனிடம் கொண்டு போய்க் கொடுத்து இனாம் பெற்றுச் சென்றான்.

மறுநாள் ஒரு பாத்திரத்தில் சில பொருட்களை வைத்து மூடி, காவலாளி விசாகனிடம் கொடுத்தான் அரசன். அதையும் அரசாங்க ஊழியன் ஒருவன், இரண்டு பொன்களைக் கொடுத்து அவனிடமிருந்து பெற்றுச் சென்றான்.

அதைக் கொண்டு போய் அவன் அரசனிடம் கொடுத்து இனாம் பெற்றான். மூன்றாம் நாளும், ஒரு பாத்திரத்தில், ஒரு முத்து மாலையை வைத்து காவலாளியிடம் கொடுத்தான் அரசன்.



மற்றொரு அரசாங்க ஊழியன், மூன்று பொன்னைக் கொடுத்து, காவலாளியிடமிருந்து பாத்திரத்தைப் பெற்றுச் சென்று அரசனிடம் கொடுத்தான். காவலாளி விசாகனின் வறுமை நீங்கவில்லை என்பதையும், அவன் ஏமாளியாக இருப்பதையும் அரசன் உணர்ந்தான். மீண்டும் ஒரு பாத்திரத்தில் பொன்னும், பொருளும் வைத்து, விசாகனுக்குக் கொடுத்தான். அவன் அரசனை வணங்கி, அதை வாங்கும் போது, பாத்திரத்தின் மூடி திறந்து, அதில் உள்ள பொன்னும் பொருளும் கீழே விழுந் தன. அப்போது தான் காவலாளிக்கு உண்மை தெரிய வந்தது.

அரசன் மூன்று தடவை கொடுத்த பாத்திரங்களை, தன்னுடைய முட்டாள் தனத்தால் "என்ன இருக்கிறது' என்று பாராமல் அப்படியே கொடுத்து விட்ட முட்டாள் தனத்தை நினைத்து, தன்னை நொந்து கொண்டான் விசாகன்.

இம்முறை பாத்திரம் விசாகனிடம் சேர்ந்தது. அதில் உள்ளதை அவன் உணரச் செய்ததை எண்ணி அரசன் மகிழ்ந்து மனநிறைவு பெற்றான். விசாகனது வறுமை ஒழியது. அத்துடன், அவனது முட்டாள் தனமும் மறைந்தது.

# மகாபாரதம்

06



செம்படவ அரசன்... தேவவிரதனை மிக்க மரியாதையுடன் அழைத்துச் சென்றான். தேவவிரதன்தான் வந்த நோக்கத்தைச் சொன்னான். செம்படவ மன்னனோ தன் நிபந்தனையை மீண்டும் வலியுறுத்தினான். என் மகளுக்குப்பிறக்கும் மகனே சந்தனுக்குப் பின் அரசுரிமை பெற வேண்டும் என்றான்.

உடனே தேவவிரதன் இவளுக்குப் பிறக்கும் மகனே அரசுரிமை ஏற்பான். வேறு யாருக்கும் அந்த உரிமை இல்லை என்று உறுதியாகக் கூறினான். நீங்கள் திருமணத்திற்கு சம்மதிக்க வேண்டும் என்றான்.

செம்படவ அரசன் தேவவிரதனே அரச குலத்தில் பிறந்தவன் கூறாததை நீர் கூறினீர். நீர் சொல்வதை உம்மால் காப்பாற்ற இயலும். நீங்கள் சத்தியம் தவறாதவர் என்பதில் எனக்குத் துளியும் சந்தேகம் கிடையாது. ஆனால் உமக்கு உண்டாகும் சந்ததி பற்றி எனக்குச்சந்தேகம்உண்டு.

நீங்கள் இப்போது தரும் வாக்குறுதியை உம் சந்ததியினர் மீறலாம் இல்லையா? என வினவினான்.

உடன் தேவவிரதன், செம்படவ அரசே! எனது சபதத்தை கேளுங்கள். இங்குள்ள புலனாகாத பூதங்களும் பலர் அறிய வீற்றிருப்போரும் இந்த சபதத்தை கேட்கட்டும். அரசுரிமையை சற்று முன் துறந்து விட்டேன். சந்ததியையும் துறக்க நான் மேற்கொள்ளும் சபதத்தைக் கேளுங்கள்.

இன்று முதல் நான் பிரம்மச்சரிய விரதத்தை மேற்கொள்கிறேன். நான் பொய் சொன்னதில்லை. என் உயிர் உள்ளவரை புத்திர உற்பத்தி செய்யேன். இது சத்தியம்.

என்தந்தைக்காக இந்த தியாகம் செய்கிறேன். இனியாவது சந்தேகம் இல்லாமல் உம் மகளை என்தந்தைக்கு திருமணம் செய்து கொடுங்கள்".

தேவவிரதனின் இந்த சபதத்தைக் கேட்டு செயற்கரியசபதம்செய்த அவன் மனவுறுதியை அனைவரும் புகழ்ந்தனர். அனைவரும்அவரை பீஷ்மர் (யாவரும் அஞ்சத்தக்க சபதம் மேற்கொண்டவர்) எனப் போற்றினர்.


பெரியோர்கள் ஆசியோடு செம்படவப் பெண் சத்தியவதியை அழைத்துக்கொண்டு சந்தனுவிடம் வந்தார் பீஷ்மர். அவரின் சபதத்தை கேள்விப்பட்டு சந்தனு வருத்தமுற்றான்.

பின் மகனுக்கு ஒருவரம் அளித்தான் "இம்மண்ணுலகில் எவ்வளவு காலம் நீ உயிருடன் இருக்க விரும்புகிறாயோ அவ்வளவு காலம் வாழ்வாய். எமன் உன்னை அணுக மாட்டான்" என்றான்.

சத்தியவதி உண்மையில் சேதி நாட்டு அரசனான உபரிசரஸ் என்னும் மன்னனின் மகள். செம்படவ அரசனால் வளர்க்கப்பட்டவள்.

(தொடரும்)

# அடுத்த ஏழு நாட்களுக்கு முடக்கப்பட்ட ஆக்லாந்து



(வெலிங்டன்)

நியூசிலாந்து நாட்டின் மிகப் பெரிய நகரமான ஆக்லாந்து நேற்று அதிகாலை முதல் அடுத்த ஏழு நாள் முடக்கல் நிலைக்குச் செல்லும் என்று நியூசிலா ந்தின் பிரதமர் ஜசிந்தா ஆர் டெர்ன் தெரிவித்தார்.

ஆக்லாந்தில் கிட்டத்தட்ட 2 மில்லியன் குடியிருப்பாளர்கள் மூன்று நாள் முடக்கல் நிலையினை எதிர்கொண்ட இரண்டு வாரங்களுக்குப் பிறகு, அங்குள்ள குடும்பத்தில் ஒருவருக்குக் கொரோனா வைரஸின் மாறுபட்ட வடிவம் கண்ட றியப்பட்டுள்ளமை குறிப்பிட த்தக்கது. (நி-4)

# துப்பாக்கிச் சூட்டில் 11 பேர் உயிரிழப்பு

(மெக்ஸிக்கோ)

மெக்ஸிக்கோவின் மேற்கு மாநிலமான ஜாலிஸ்கோவில் லொறியொன்றில் சென்ற அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஜனாதிபதி ஆண்ட்ரஸ் மானுவல் லோபஸ் ஒப்ராடோர் 2018 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் பதவியேற்றார். வன் முறையை குறைப்பதாக உறுதியளித்தார்.

எனினும் மெக்ஸிக்கோவில் வெகுஜன படுகொலைகளும் பல்லாயிரக்கணக்கான படுகொலைகளும் தொடர்ந்தும் அரங்கேறிய வண்ணமே உள்ளது. (நி-4)

# கொரோனாலிருந்து மீண்டார் பழ.நெடுமாறன்



(சென்னை)

கொரோனாத் தொற்று பாதிப்பு காரணமாக சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த பழ. நெடுமாறன் குணமடைந்த நிலையில் வீடு திரும்பினார்.

தமிழ்நாட்டு தமிழ்த் தேசியத் தளத்தில் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக சுமார் அரை நூற்றாண்டு காலமாக செயற்பட்டு வரும் தமிழர் தேசிய முன்னணி தலைவர் பழ. நெடுமாறனுக்கு அண்மையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

இதையடுத்து சென்னையில் உள்ள ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு வந்தது.

சிகிச்சையின் பின்னர் முழுமையாக குணமடைந்த பழ.நெடுமாறன் தற்போது வீடு திரும்பி ஓய்வில் உள்ளார்.

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக உறுதியுடன் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக செயற்பட்டு வரும் பழ.நெடுமாறன் குணமடைய வேண்டும் என ஈழத்திலும் புலத்திலும் உள்ள ஈழத் தமிழர்கள் விசேட வழிபாடுகளை நடத்தி வேண்டியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-4)

# இராணுவ சதித்திட்டத்திற்கெதிரான ஆர்ப்பாட்டம் பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் பலி




(மியன்மார்)

இராணுவ சதித்திட்டத்திற்கு எதிரான பல வார கால ஆர்ப்பாட்டங்களை முடிவுக்கு கொண்டுவருவதற்கான முயற்சியில் மியன்மார் பொலிஸார் நேற்று மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அத்துடன் ஆர்ப்பாட்டங்களை கலைக்க பொலிஸாரும், இராணுவத்தினரும் முன்னெடுத்த முயற்சியின் போது பலர் காயமடைந்துள்ளனர். (நி-4)

# தமிழ்நாடு உள்ளிட்ட 5 இந்திய மாநிலங்களில் ஏப்ரல் 6 ஆம் திகதி சட்டப்பேரவை தேர்தல்

## அதிகாரபூர்வமான அறிவிப்பு




(சென்னை)

தமிழகம், கேரளா, புதுச்சேரி யூனியன் பிரதேசம் உள்ளிட்ட ஐந்து இந்திய மாநிலங்களுக்கான சட்டப்பேரவைத் தேர்தல் மார்ச் 27ஆம் திகதி முதல் எட்டு கட்டங்களாக நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

தமிழகம், கேரளா, புதுச்சேரி உள்ளிட்ட மாநிலங்களில் ஏப்ரல் மாதம் 6ஆம் திகதி என்று ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அதிகாரபூர்வமான அறிவிப்பை வெளியிட்டிருக்கிறது. வாக்கு எண்ணிக்கை மே மாதம் 2ஆம் திகதியன்று நடைபெறும் என்றும் தெரிவித்துள்ளது. தேர்தல் அறிவிப்பு வெளியானவுடன் அந்தந்த மாநிலங்களில் தேர்தல் ஆணைய நடத்தை விதிமுறைகள் அமுலுக்கு வந்திருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

வெளிநாடு வாழ் இந்தியர்கள் வாக்களிக்கும் வசதி இந்த தேர்தலில் நடைமுறைப்படுத்தப்படாது என்றும், இது தொடர்பான ஆலோசனை நடத்தப்பட்டு வருவதாகவும் தலைமைத் தேர்தல் ஆணையர் சுனில் அரோரா தெரிவித்தார். (நி-4)

# எண்ணெய்க் கசிவை ஆராய்வதற்கு ஆராய்ச்சியாளர்களை அனுப்பும் இஸ்ரேல்



(ஜெருசலேம்)

இஸ்ரேலின் கரையோரப் பகுதியில் எண்ணெய்க்கசிவை ஏற்படுத்தியதாக சந்தேகிக்கப்படும் ஒரு கப்பலை ஆய்வு செய்ய கிரேக்கத்திற்கு ஆராய்ச்சியாளர்களை இஸ்ரேல் அனுப்பியுள்ளது.

இஸ்ரேலில் இருந்து சுமார் 50 கி.மீ. கடலோரப் பாதையில் சென்ற ஒரு கப்பலில் இருந்து கசிவு ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்ட பின்னர் ஆராய்ச்சியாளர்களை அனுப்பியுள்ளதாக சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் சுற்றுச்சூழல் மாசுபாட்டிற்கு காரணமானவர்களை கண்டுபிடிக்கும் வரை அனைத்து நடவடிக்கைகளையும் மேற் கொள்வோம் என இஸ் ரேஸ் அறிவித்துள்ளது. இருப்பினும் கப்பல் பற்றிய விபரங்களை இஸ்ரேல் இதுவரை வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி-4)

# பாடசாலை மாணவிகள் 317 பேரை கடத்திய பயங்கரவாதிகள்

(லாவோஸ்)

நைஜீரியாவில் பாடசாலை அருகில் இருந்த இராணுவ முகாம் மீது தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகள், 317 மாணவிகளை துப்பாக்கி முனையில் கடத்தி சென்றனர்.

நைஜீரியா நாட்டில் போகோ ஹராம் பயங்கரவாதிகள் ஆதிக்கம் உள்ளது. இந்த நிலை யில் ஜான்கேபே மாகாணத்தில் உள்ள அரசு பாடசாலைக்குள் பயங்கர ஆயுதங்களுடன் பயங்கர வாதிகள் புகுந்தனர்.

அப்போது பாடசாலை அருகில் இருந்த இராணுவ முகாம் மீது பயங்கரவாதிகளின் ஒரு பிரிவினர் தாக்குதல் நடத்தினார்கள். பின்னர் பாடசாலையில் இருந்த 317 மாணவிகளை துப்பாக்கி முனையில் கடத்தி சென்றனர்.

பாடசாலைக்குள் பயங்கரவாதிகள் பல மணி நேரம் இருப்பதற்காக வெளியில் இருந்த பயங்கரவாதிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தியபடி இருந்தனர். இதனால் மாணவிகளை கடத்தி செல்வதை தடுக்க முடியவில்லை.

கடந்த 2014ஆம் ஆண்டு 276 பாடசாலை மாணவிகளை பயங்கரவாதிகள் கடத்தி சென்றனர். அவர்களில் 100 இற்கும் மேற்பட்ட பெண்கள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. (நி-4)



தமிழ் மக்கள் பல தசாப்தங்களாக சிங்களப் பேரினவாத அரசினால் மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறைகள் மற்றும் இனவழிப்புக்களினை சந்தித்து வந்துள்ளது. எனவே நிகழ்ந்த, நிகழ்ந்து கொண்டிருக்கின்ற இனவழிப்பிற்காக சிங்களப் பேரினவாத அரசினை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தி நீதியினைப்பெற்றுக்கொள்ளும் நோக்கிலும் தமிழ்த் தேசத்தின் விடுதலையினை வேண்டியும் 22 ஆவது தடவையாக மனிதநேய ஈருருளிப்பயணம் நெதர்லாந்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு கடந்த 21 ஆம் திகதி ஐ.நா. முன்றலினை வந்தடைந்தது.

# மதம் மீது ஈர்ப்புக் கொண்ட மக்களை கட்டியெழுப்புவது அவசியமாகும்

(அம்பாந்தோட்டை)

மதம் மீது ஈர்ப்புக் கொண்ட மக்களை நாம் கட்டியெழுப்புவதன் ஊடாக நாட்டை சரியான பாதையை நோக்கிக் கொண்டு செல்ல முடியுமென பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அறநெறி பாடசாலைகள் மூலம் குழந்தைகளை நல்ல குடிமக்களாக மாற்ற முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். நீங்கள் சிறைச்சாலைகளைப் பார்த்தால், பெரும்பாலான



சிறைச்சாலைகள் ஒருபோதும் அறநெறி பாடசாலைகளுக்கு செல்லாத மக்களாலேயே நிரம்பியுள்ளன.

அறநெறிப் பாடசாலைக்கு செல்லும்போது பிள்ளைகள் ஒழுக்கமுடையவர்களாகவும் மதம் மீதான ஈர்ப்பைக் கொண்டவர்களாகவும் மாறுவதுடன், இது சமுதாயத்தில் ஒழுக்கத்தை உருவாக்குகிறது என்ற நம்பிக்கையில்தான் ஒரு நாட்டை நீதியுள்ள சமூகமாக கட்டியெழுப்ப முடியும்.

ஒரு மாவட்டம், ஒரு மாகாணம் மற்றும் ஒரு நாட்டிற்குள் மதம் மீது ஈர்ப்புக் கொண்ட மக்களை நாம் கட்டியெழுப்புவோமாயின், அந்த மாவட்டம், மாகாணம் அல்லது நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்லும் திறன் நமக்கு ஏற்படும்.

ஞாயிற்றுக்கிழமைகளிலோ அல்லது பௌர்ணமி நாட்களிலோ நாம் மத நடவடிக்கைகளை மேற்கொண்டால், மக்களை அவ்வழியில் வழிநடத்துவதன் மூலம் குற்றங்களை குறைக்க முடியும்என்று நாங்கள் நம்புகிறோம். சிறைச்சாலைகள் நிரம்புவது நிறுத்தப்படும் என்று நாங்கள் நம்புகிறோம்" என அவர் தெரிவித்தார். (நி-4)

# திருடப்படும் உந்துருளிகள் பாகம் பிரித்து விற்பனை செய்யும் நிலையம் கண்டுபிடிப்பு



(கொழும்பு)

திருடப்படும் உந்துருளிகளை கொள்வனவு செய்து பாகம் பிரித்து விற்பனை செய்யும் நிலையம் ஒன்று கல்நேவ - நேகம பகுதியில் கண்டறியப்பட்டுள்ளது. குறித்த இடத்தில் இருந்து உந்துருளிகள் பதிவு செய்யப்பட்டிருந்த 23 இலக்க தகடுகள், இயந்திரங்கள் உள்ளிட்ட உதிரிப்பாகங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-4)

# ஆயிரம் ரூபாய் சம்பள விவகாரம்; சம்பள நிர்ணய சபை கூடுகிறது



(ஹற்றன்)

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் ஆயிரம் ரூபாய் சம்பள அதிகரிப்பு தொடர்பாக சம்பள நிர்ணயசபை இன்று மீண்டும் கூடி பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கவுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக 1040 ரூபாயை வழங்க வேண்டுமென சம்பள நிர்ணய சபையில் கடந்த 8 ஆம் திகதி வாக்கெடுப்பின் மூலம் தீர்மானிக்கப்பட்டது.

எனினும் அன்றைய தினம் சம்பள நிர்ணய சபையால் தீர்மானிக்கப்பட்ட சம்பளத்தை வழங்குவதாயின் வாரத்தில் 3 நாட்கள் மாத்திரமே வேலை வழங்க முடியும் என கம்பனிகள் சம்பள நிர்ணய சபைக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதாக சம்பள நிர்ணய சபையின் உறுப்பினரும் விவசாய தோட்ட தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான ஆர்.எம். கிருஷ்ணசாமி தெரிவித் தார்.

அதேநேரம், நாளொன்றுக்கு 16 கிலோவிற்கும் குறைவாக கொழுந்து பறிக்கும் பெண்களுக்கு முழு நாளுக்கான சம்பளம் வழங்கப்பட மாட்டாது என்றும் குறித்த கடிதத்தில் தெரிவித்திருந்ததாக அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில், இன்று கம்பனிகள் சம்பள நிர்ணய சபையை புறக்கணித்தால் அல்லது தமது தீர்மானத்தில் விடாப்பிடியாகவே இருக்குமானால் தொழில் அமைச்சரே அடுத்தகட்ட நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (நி-4)




**றியானா**

"அண்ணே ஏன் சோகமாக இருக்கீங்க?"
"என் பொண்டாட்டி மூனு மாசம் என் கூட பேச மாட்டேன்னு சொல்லிட்டாப்பா"



"அதுக்கு சந்தோசம் இல்ல படனும் ஏன் அழுகுகிறீங்க?" அந்த மூனு மாசம் இன்னையோட முடியுதப்பா...முடியுதப்பா

**விதுசா**

அண்ணன்-தம்பிக்குள் இருக்கும் பாசத்தை விட



அண்ணன்-தங்கைக்குள் இருக்கும் பாசமே அதிகம்

**கபில்ராஜ்**



எனக்கு ஒரு உண்மை தெரிஞ்சாகனும் நடப்பதெல்லாம் நன்மைக்கேன்னு சொல்லுறாங்களே...எத்தனை கிலோ மீற்றர் நடந்தா நல்லது...?

**விந்துசன்**

நம்பிக்கையோடு
உன் முதலடியை
எடுத்து வை
முழுப் படிக்கட்டையும்
நீ பார்க்க வேண்டிய
அவசியமில்லை
முதல் படியில் ஏறு

**சுலக்ஷன்**



வீட்டில பொருள், பணம் எல்லாம் பூட்டி வைச்சிட்டு 10 நாள் எப்படி தைரியமா வெளியூர் போயிட்டு வந்தே... திருட்டுப்பயம் அதிகமாக உள்ள ஊர் ஆச்சே? வீடு வாடகைக்குன்னு போர்ட் மாட்டிட்டுப் போயிட்டேனே

**தும்சி**

நேரத்தை மிச்சப்படுத்துவதற்காக கண்டு பிடிக்கப்பட்டதுதான் கம்பியூட்டரும் மொபைல் போனும்



நாங்கல்லாம் நேரத்தை செலவு செய்வதே அதுலதான்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்ப விண்ணப்பங்களை கோருமாறு ஜனாதிபதி உத்தரவு

(திருமலை)

**நீண்ட காலமாக பாடசாலைகளில் நிலவும் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் மற்றும் கணனி தொழில்நுட்ப ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்ப உடனடியாக விண்ணப்பங்களை கோருமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கல்வி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.**



திருகோணமலையில் நடைபெற்ற 'கிராமத்துடன் உரையாடல்' நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றிய போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அதன்படி, நியமனம் வழங்கப்பட்ட அதே பாடசாலையில் எட்டு வருட சேவையின் அடிப்படையில் சில பாடங்களுக்கான வெற்றிடங்களுக்கு புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், நாட்டின் அனைத்து பாடசாலைகளிலும் காணப்படும் கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் மற்றும் கணனி தொழில்நுட்பம் உள்ளிட்ட பாடங்களின் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்ப அடுத்த வாரம் விண்ணப்பங்களை கோர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். (நி-4)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அறிக்கை பயனற்றது- பெங்கமுவே நாலக தேரர்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை பயனற்றது. அறிக்கையின் ஊடாக தேசிய பௌத்த அமைப்புக்களை தடை செய்ய அரசாங்கம் முயற்சிக்கிறதா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக தேசிய ஒருங்கமைப்பு அமைப்பின் செயலாளர் பெங்கமுவே நாலக தேரர் தெரிவித்தார்.

குறித்த அறிக்கைக்கு பௌத்த தேரர்கள் அனைவரும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளோம். குண்டுத்தாக்குதல் தொடர்பில் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை அரசாங்கம் விரைவாக நிறைவேற்ற வேண்டும். இவ்விடயம் குறித்து ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தையினை முன்னெடுக்கவுள்ளோம் என்றும் பெங்கமுவே நாலக தேரர் தெரிவித்தார்.

தேசிய ஒருங்கமைப்பு அமைப்பின் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு முழுமையற்ற அறிக்கையினை சமர்ப்பித்துள்ளது.

பௌத்த அமைப்புக்கள் நாட்டில் அடிப்படைவாதத்தை தூண்டுகிறது என்ற தவறான நிலைப்பாட்டை ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கை சமூகத்தின் மத்தியில் தோற்றுவித்துள்ளது.

குண்டுத்தாக்குதல் சம்பவத்தை திட்டமிட்டது யார் என்ற உண்மை காரணியை ஆணைக்குழு பகிரங்கப்படுத்தவில்லை. இதனை அறிக்கையின் பிரதான குறைபாடாக கருத வேண்டும். நாட்டு மக்கள் எதிர்பார்த்த புதிய விடயங்கள் ஏதும் அறிக்கையில் சுட்டிக்காட்டவில்லை.

விசாரணை அறிக்கை அரசியல்படுத்தப்பட்டுள்ளது. தேசிய பௌத்த அமைப்புக்களை அரசாங்கம் தடை செய்ய முயற்சிக்கிறதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இஸ்லாமிய அடிப்படைவாதம் நாட்டில் பல விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. அடிப்படைவாதத்துக்கு எதிராக பௌத்த அமைப்புக்கள் செயற்பட்டுள்ளன. இதனைத் தவறு என்று குறிப்பிட முடியாது.

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் தொடர்பிலான உண்மைத் தன்மையினை அரசாங்கம் பொறுப்புடன் வெளிப்படுத்த வேண்டும். தற்போது வெளியிடப்பட்டுள்ள அறிக்கைக்கு எதிராக பௌத்த தேரர்கள் அனைவரும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளோம். இவ்விடயம் குறித்து ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தையினை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம் என நாலக தேரர் தெரிவித்தார்.(நி-4)

# நாட்டில் ஏற்படும் பயங்கரவாத செயல்களுக்கு ஜனாதிபதியே பொறுப்புக் கூற வேண்டும்

## இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

நாடொன்றில் பயங்கரவாத செயல்கள் இடம்பெற்றால் அதற்கு அந்நாட்டின் ஜனாதிபதியே பொறுப்புக்கூற வேண்டுமென இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாளை நாட்டில் குண்டு வெடித்தால் ஜனாதிபதியும் பிரதமரும் பாதுகாப்பு செயலாளரும் முப்படைகளின் தளபதியுமே பொறுப்பேற்க வேண்டும். இது கசப்பான யதார்த்தமாகும்.

அந்தவகையில் இந்த விடயம் உயிர்த்த ஞாயிறு தாக்குதலிற்கும் பொருந்தும். எனவே ஜனாதிபதி ஆணைக்குழு இதனை தெளிவுபடுத்த வேண்டியதில்லை.

மேலும், அவ்வேளை நாட்டின் தலைவராகயியிருந்தவரையே பொறுப்பாளியாக்க வேண்டும் என தெரிவித்தார். (நி-4)

## இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# கலிலியோவின் கண்டுபிடிப்பு

பைசா நகரத்தில் ஒரு பல்கலைக்கழகம். அங்கே ஒருத்தர் படித்துக் கொண்டிருந்தார். அந்த ஊரிலே ஒரு மாதா கோயில். அந்த மாதா கோயிலில் ஆராதனை நடந்துகொண்டிருக்கின்றது. இவர் அங்கே போயிருந்தார். ஏதோ ஒரு யோசனையில் அந்த மாதா கோயிலை அண்ணாந்து பார்த்தார்.

தலைக்கு மேலே கூரையில் ஒரு தொங்குவிளக்கு. அது அழகாக இருந்தது. காற்றிலே இப்படியும் அப்படியும் ஆடிக் கொண்டிருந்தது.

அது ஊசலாடிக் கொண்டிருந்ததை இவர் கொஞ்சம் கவனித்துப் பார்த்தார். அது அப்படியும் இப்படியும் அசையும் போது அங்கேயும் இங்கேயும் போய்வருகின்ற தூரம் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து கொண்டே வந்தது.

ஆனால் அதிலே ஒரு அதிசயத்தை அவர் கவனித்தார். அது என்னவென்றால் அது ஆரம்பத்தில் ஒரு விநாடிக்கு எத்தனை தட்வை அங்கேயும் இங்கேயும் போய் வந்ததோ..அதே மாதிரி அது அசைகின்ற தூரம் குறைந்தால் கூட அதே நேரத்தில் அங்கேயும் இங்கேயும் போய் வந்தது. ஊசலாடிய அந்த விளக்கு சென்ற தூரம் குறைந்தாலே ஒழிய அசைவின் எண்ணிக்கை குறையவே இல்லை. அந்த சமயத்திலேயெல்லாம் கடிகாரங்கள் நடைமுறைக்கு வரவில்லை.

அதனால் இதை அவர் எப்படி நிரூபித்தார் என்றால் தம்முடைய நாடித்துடிப்பை வைத்துக் கொண்டு அசைகின்ற பொருளின் விசாலம் மாறினாலும் கால அளவு மாறவில்லை என்பதை அறிஞர்கள் முன் நிரூபித்துக் காட்டினார். இப்படிக் காட்டியவர் யார் தெரியுமா? அவர் தான் கலிலியோ விஞ்ஞான மேதை. அந்த விளக்கு எவ்வளவோ காலமாகத்தான் ஆடிக் கொண்டிருக்கு.. எத்தனையோ பேர் இதற்கு முன்னர் பார்த்துக் கொண்டு தான் இருந்தார்கள்.

இருந்தாலும் அவர்களுக்கெல்லாம் ஒன்றும் தோன்றவில்லை. ஏதோ காற்றிலே ஆடுகின்றது என்பதால் விட்டுவிட்டார்கள். ஆனால் இவருக்குத் தான் அதிலே உள்ள நுட்பம் புரிந்தது. அது தான் நமக்கும் விஞ்ஞானிகளுக்கும் உள்ள வித்தியாசம்.

கலிலியோ கண்டுபிடித்து நிரூபித்துக் காட்டிய அந்த விதியை அடிப்படையாக வைத்துத்தான் மாறாத கால அளவிலே ஊசலாடும் ஊசல் அமையப் பெற்ற கடிகாரங்களை உருவாக்கினார்கள்.

இன்றைக்கு உலகம் முழுவதிலும் நடைமுறையில் இருக்கும் பெண்டுலம் கடிகாரங்களுக்கெல்லாம் ஆதாரம் கலிலியோ கண்டுபிடித்த அந்தத் தத்துவம் தான். அப்படிக் கண்டுபிடிக்கப்பட்ட கடிகாரம் இன்றைக்கு எவ்வளவோ மாற்றங்களைக் கண்டிருக்கிறது.

சில பேரால் அலாரம் வைக்காமல் காலையில் எழுந்திருக்க முடியாது. கடிகாரம் தான் எழுப்பிவிட வேண்டியிருக்கு. ஒரு குடும்பத்தில் கணவனும் மனைவியும் பேசிக் கொள்வது இல்லை. ஏதோ மனஸ்தாபம். வாய் விட்டுத் தான் பேசிக் கொள்வதில்லையே தவிர எழுத்து மூலமாக பேசிக்கொள்வார்கள்.

தேநீர் ரெடியா? என்று இவர் ஒரு பேப்பரில் எழுதிக் காட்டுவார். இதோ போட்டுக் கொண்டு வருகின்றேன் என்று அவர்கள் ஒரு பேப்பரில் எழுதிக் காட்டுவார்கள்.

போட்டுக் கொள்வதற்கு சட்டை எங்கே? என்று இவர் எழுதிக் காட்டுவார். உங்கள் பெட்டிமேலே வைத்திருக்கின்றேன் என்று அவர்கள் எழுதிக் காட்டுவார்கள். இப்படியே அந்தக் குடும்பம் நடந்து கொண்டிருந்தது. ஒரு நாள் அவர் அவசரமாக வெளியூர் புறப்பட வேண்டியிருந்தது காலை 5 மணிக்கு ரயிலைப் பிடிக்க வேண்டும். அதனால் இவர் என்ன செய்தார். ஒரு பேப்பரிலே எழுதினார்.

நாளைக்கு 5 மணிக்கு ரயில்.. நான்கு மணிக்கே வீட்டைவிட்டுப் புறப்படவேண்டும். அதனால் சரியாக நான்கு மணிக்கு என்னை எழுப்பிவிடு என்று எழுதி மனைவியிடம் காட்டினார்.

அவர்களும் சரி என்று எழுதி இவரிடம் காட்டினார்கள் ஆனால் என்ன ஆகிவிட்டது தெரியுமா?

மறுநாள் ஏழுமணி ஆகிவிட்டது. அப்பொழுது தான் அவர் முழித்துக் கொண்டார். என்ன செய்வது 5 மணிக்கு ரயில் போயிருக்கும்.

உடனே கோபமாக ஒரு பேப்பரை எடுத்தார். எழுதினார். பேசாமல் ஒரு கடிகாரத்தில் அலாரம் செட் செய்து வைத்துவிட்டு நான் படுத்திருக்கலாம். உன்னை நம்பினேன் 4 மணிக்கு எழுப்பி விடச் சொன்னேனே என்னவாகிவிட்டது உனக்கு? என்று எழுதி மனைவி முகத்திற்கு நேரே நீட்டினார்.


அவர்களும் பதிலுக்கு ஒரு பேப்பர் துண்டிலே உங்கள் தலையணைக்கு அடியில் பார்க்கவும் என்று எழுதி நீட்டினார்கள்.

அவர் உடனே அவசரமாக தலையணையை எடுத்துக் கொண்டு பார்த்தார். அங்கே ஒரு துண்டுச் சீட்டு.. அதிலே எழுதியிருந்தது. மணி நான்கு ஆகிவிட்டது எழுந்திருக்கவும்.

# அமெரிக்காவின் சிக்கல் நிறைந்த ஜனாதிபதித் தேர்தல் முறைமையும் சர்ச்சைகள் நிறைந்த ஜோ பிடனின் பதவிப் பிரமாணமும் -2021

17

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



இதைத்தொடர்ந்து அரிஸோனாவில் பதிவான வாக்குகளுக்கு எதிராக தங்களின் குரலை குடியரசுக் கட்சி உறுப்பினர்கள் பதிவு செய்தனர். அங்கு ஜோபிடனின் வெற்றியைத் தீர்மானிப்பது பற்றி விவாதங்கள் நடந்தன. இரு தரப்பிலும் உறுப்பினர்கள் பேசும்போது இரு அவை உறுப்பினர்களும் உற்சாகமாகவே காணப்பட்டனர். பலர் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர்

செனட்டர் கென்டக்கி பேசிக்கொண்டிருந்த போது கப்பிட்டல் கட்டடத்துக்கு வெளியே கோபாவேசத்துடன் ட்ரம்பின் ஆதரவாளர்கள் தீவிர வன்முறையில் இறங்கினார்கள். போதுமான பாதுகாப்பு நடவடிக்கைகள் இருக்காத காரணத்தால், ட்ரம்பின் ஆதரவாளர்கள் உள்ளே நுழைந்தபோது வேறு வழியின்றி ஜனாதிபதித் தேர்வு நடைமுறைகளை நிறுத்தும் அளவுக்குப் பிரச்சினை தீவிரமாகியது.

கலவரக்காரர்களிடம் இருந்து தப்பித்தால் போதும் என்ற எண்ணத்துடன் அவைக்குள் இருந்த செனட்டர்கள், ஊடகத்தினர் கிடைக்கும் இடத்தில் எல்லாம் ஒளிந்து கொள்ள முற்பட்டனர்.

ஆனால், ட்ரம்பின் ஆதரவாளர்கள் பெருமளவில் அவைக்குள் குவியத் தொடங்கினர். கடைசியில் அவைக்குள்ளேயே அவர்கள் அமெரிக்கக் கொடிகளுடன் நடமாடத் தொடங்கிய காட்சிகளை ஊடகங்கள் நேரலையாக ஒளிபரப்பின. சமூக ஊடகங்களில் இந்தக் காட்சிகள் வைரலாகின. இரு அவை தலைவர்களின் அறைகள், எம்.பிக்களின் அறைகள் என எங்கும் அவர்கள் நுழைந்தனர்.

அப்போது அங்கு நடந்த வன்முறையைக் கட்டுப்படுத்த பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் ஒரு பெண் பலியானார். கூட்ட நெரிசலில் சிக்கி மேலும் 3 பேர் பலியாகி விட்டனர். 6 மணி நேரமாக நீடித்த இந்தப் போராட்டத்தை பொலிஸார் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

6 ஆம் திகதி இரவே மீண்டும் தேர்தல் சபை வாக்குகளை எண்ணும் பணி பாராளுமன்றத்தில் தொடரும் என்று பாராளுமன்ற பிரதிநிதிகள் அவைத் தலைவர் நான்சி பெலோசி அறிவித்தார். இதையடுத்து பாராளுமன்றக் கூட்டுக் கூட்டம் மீண்டும் கூடியது.

ஜோபிடனை வெற்றியாளராக அறிவிக்கும் நடைமுறை மீண்டும் தொடங்கியது. இரு அவைகளின் உறுப்பினர்களும் விவாதம் நடத்தினர். இந்த நிலையில் ஆங்கில அகரவரிசைப்படி ஒவ்வொரு மாகாணத்தின் வாக்குகளும் எண்ணப்பட்டன.

இந்த வாக்கு எண்ணிக்கை முடிந்தவுடன் செனட்டர் ஏமி க்லோபூச்சர் முடிவுகளை அறிவித்தார். அப்போது அவர் கூறுகையில், வாக்குகளின் அடிப்படையில் ஜோபிடனும் கமலா ஹாரிஸூம் ஜனாதிபதியாகவும் துணை ஜனாதிபதியாகவும் தேர்வு செய்யப்படுகிறார்கள். இந்தத் தேர்தலில் ஜோபிடன் வெற்றி பெற்றவராக அறிவிக்கப்படுகிறார் என்றார். உடனே கைத்தட்டல்கள் விண்ணை முட்டின.


இதையடுத்து துணை ஜனாதிபதி பென்ஸ் கூறுகையில், பிடனுக்கு 306 வாக்குகளும் ட்ரம்பிற்கு 232 வாக்குகளும் கிடைத்துள்ளன. அவர்களது தேர்வுக்கு இதுவே போதுமானது என்றார்.

வோஷிங்டனில் நடக்கும் கலவரங்களால் அதிர்ச்சி அடைந்த ஜோ பிடன், கலவர காட்சிகளைக் கடுமையாகக் கண்டித்தார். "இந்த நேரத்தில் நமது ஜனநாயகம் முன்னெப்போதும் இல்லாத வகையில் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது. நவீன காலங்களில் நாம் கண்ட எதையும் போல இல்லாமல் இது நடந்திருக்கிறது" என்று அவர் குறிப்பிட்டார். "சுதந்திரக் கோட்டை மீதே தாக்குதல் நடந்து விட்டது" என்று அவர் தெரிவித்தார்.

அடுத்த சில நிமிடங்களில், ட்ரம்ப் நாட்டு மக்களுக்கு உரையாற்றத் தொடங்கினார். ஆனால், பிடன் யோசனை கூறியதைப் போல ட்ரம்பின் உரை அமையவில்லை. அதற்குப் பதிலாகத் தேர்தல் முடிவுகளை திருடி விட்டதாகத் தனக்கு உரிய வகையில் தொடர்ந்து தனது குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்த ட்ரம்ப், தனது ஆதரவாளர்களிடம் எல்லோரும் வீட்டுக்குச் செல்லுங்கள். உங்களை நேசிக்கிறோம். நீங்கள் மிகவும் சிறப்பானவர்கள் என்று தெரிவித்தார்.

இன்றைய நாளில் ட்ரம்பின் அடுத்தடுத்த டுவிட்டுகளை டுவிட்டர் நிறுவனம் முடக்கியது. அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்று முதல் டுவிட்டர் பக்கம் மூலம் உரையாற்றுவதை வாடிக்கையாகக் கொண்ட ட்ரம்ப், அந்தப் பழக்கத்துக்கு ஐக்கியமானவராகவே அறியப்பட்டார்.

ஆனால், இதுவரை இல்லாத வகையில் ஜனாதிபதியின் டுவிட்டர் பதிவுகளைத் தொடர்ச்சியாக டுவிட்டர் நிறுவனம் முடக்கியது.



பாராளுமன்ற அவையில் புகுந்த ஒரு கலவரக்காரர் கையில் அவைத் தலைவரின் உரை மேடையைத் தூக்கிக் காட்டுகிறார்

6 ஆம் திகதி காலை முதல் மாலை வரை வன்முறை நீடித்த வேளையில் சுமார் 6 மணி நேர கடுமையான போராட்டத்துக்குப் பிறகே கப்பிட்டல் கட்டடத்தை அமெரிக்கப் பொலிஸார், கலவரக்காரர்கள் பிடியில் இருந்து மீட்டனர். நடந்த வன்முறையை செனட் பெரும்பான்மை குழுத் தலைவரான சக்ஷூமர் கடுமையாகக் கண்டித்தார்.

ஜனாதிபதியின் காலடிக்கு உகந்தவை இந்தக் கலவரம் என்று அவர் கடுமையாகச் சாடினார். "ஜனவரி 6 ஆம் திகதி அமெரிக்க வரலாற்றின் இருண்ட நாட்களில் ஒன்றாகக் கருதப்படும்" என்று அவர் கூறினார்.

நடந்த வன்முறை காரணமாக, அமெரிக்க ஜனாதிபதியின் மனைவி மெலானியா ட்ரம்பின் தலைமை பணியாளர் ஸ்டீஃபானி கிரிஷாம், வெள்ளை மாளிகை துணை ஊடக செயலாளர் சாரா மேத்யூஸ் ஆகியோர் தங்களுடைய பதவிகளை இராஜினாமாச் செய்தனர்.

இதற்கு மேலும் நம்மால் எதுவும் செய்ய முடியாது என்பதை உணர்ந்த ட்ரம்ப் தனது தோல்வியை ஏற்றுக் கொண்டு விட்டார். அவர் வெள்ளை மாளிகையில் உரையாற்றினார். அப்போது அவர் கூறுகையில்,

கப்பிடல் கட்டடத்தில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களை மற்ற அமெரிக்கர்களைப் போல் நானும் கண்டிக்கிறேன். வெள்ளை மாளிகையில் புதிய நிர்வாகம் வரும் 20 ஆம் திகதி துவங்கப் போகிறது. அரசு நிர்வாகத்தைச் சுமுகமாகவும் முறையாகவும் ஒப்படைப்பதில் தான் எனது இப்போதைய கவனம் உள்ளது.

நாம் இப்போது ஆறுதல் கொள்ள வேண்டிய தருணம் இது என்று குறிப்பிட்டார். ட்ரம்ப் தனது பேச்சில், புதிய ஜனாதிபதி ஜோபிடன் பெயரை ஒரு முறை கூட உச்சரிக்கவில்லை. கடந்த முறை ஜனநாயகக் கட்சி தோற்று ட்ரம்ப் வெற்றி பெற்ற போது அப்போதைய ஜனாதிபதி ஒபாமா, ட்ரம்ப்புக்கு வாழ்த்துக் கூறி அமைதியாக நிர்வாகத்தை ஒப்படைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### 6 ஆம் திகதி கப்பிட்டல் கட்டடத்தில் நடந்த வன்முறைக்கு உலகத்தலைவர்கள் கண்டனம்

### இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜோன்சன் கண்டனம்

ட்ரம்ப் ஆதரவாளர்களின் இந்த செயலுக்கு உலக நாடுகளின் பல்வேறு தலைவர்கள் கண்டனம் தெரிவித்து இருந்தனர். அமெரிக்க காங்கிரசில் அவமானகரமான காட்சிகள் என்று இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜோன்சன் டுவிட்டரில் கருத்துத் தெரிவித்து இருந்தார். "அமெரிக்கா உலகெங்கிலும் உள்ள ஜனநாயகத்தைக் குறிக்கிறது. இப்போது அமைதியான மற்றும் ஒழுங்கான அதிகார பரிமாற்றம் இருக்க வேண்டியது அவசியம்" என்று போரிஸ் ஜோன்சன் கூறினார்.

### ஜேர்மனி வெளியுறவு அமைச்சர் ஹெய்கோ மாஸின் கருத்து

ட்ரம்பும் அவரது ஆதரவாளர்களும் இறுதியாக அமெரிக்க வாக்காளர்களின் முடிவை ஏற்றுக் கொண்டு ஜனநாயகத்தை மிதிப்பதை நிறுத்த வேண்டும். அழற்சி வார்த்தைகளிலிருந்து வன்முறை செயல்கள் வருகின்றன. ஜனநாயக நிறுவனங்களை அவமதிப்பது பேரழிவு விளைவுகளை ஏற்படுத்துகிறது" என்று ஜேர்மனி வெளியுறவு அமைச்சர் ஹெய்கோ மாஸ் டுவிட்டரில் தெரிவித்தார். (தொடரும்...)

## மருந்துகளுக்கு தட்டுப்பாடு

(கொழும்பு)

நாட்டில் வைத்தியசாலைகளில் புற்றுநோயாளர்களுக்கு வழங்கப்படும் மருந்துகளில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் வைத்திய உபகரணங்கள் இல்லை எனவும் முன்னாள் சுகாதார அமைச்சர் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். தமது ஆட்சிக் காலத்தில் மருந்து தட்டுப்பாடுஏற்படவில்லை எனக்கூறிய அவர், தற்போது ஏற்பட்டுள்ள மருந்துத் தட்டுப்பாடு குறித்து ஊடகங்கள் கதைப்பதில்லை எனவும் குறிப்பிட்டார். (நி-8)

## தொடரூந்துக்கான பயணச்சீட்டு; சீன நிறுவனத்திற்கு வழங்குவதற்கு எதிர்ப்பு


(கொழும்பு)

தொடரூந்து பயணச்சீட்டை மின்னணு முறையில் விநியோகிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள வேலைத்திட்டத்தை சீன நிறுவனத்திற்கு வழங்குவதற்கு தொடரூந்து இயந்திர சாரதிகள் சங்கம் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

குறித்த திட்டத்தை சீன நிறுவனத்திற்கு வழங்கினால் பாரிய நிதி இழப்பு ஏற்படும் என அந்தச் சங்கத்தின் பிரதான செயலாளர் இந்திக்க தொடம்கொட தெரிவித்தார்.

தொடரூந்து பயணச்சீட்டை மின்னணு முறையில் விநியோகிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள வேலைத்திட்டத்தை தேசிய நிறுவனம் ஒன்றுக்கு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-8)

## ஆலய வழிபாடு ஏன்-எதற்கு - எப்படி



### ஆத்ம திருப்தி தரும் 6 கால பூஜை வழிபாடு

*(தொடர்ச்சி)*

**2.காலை சந்தி**

கருவறைக்கு வந்து விடும் இறைவனுக்கு அபிஷேகம் செய்யப்படும். பிறகு பூக்களாலும் ஆபரணங்களாலும் இறைவனை அலங்காரம் செய்வார்கள். இதையடுத்துப் பரிவாரத் தெய்வங்களுக்குப் பலி போடப்படும்.

பின்னர் மூலவருக்குப் பஞ்ச உபச்சார தீபாராதனை நடத்தப்படும். இதுதான் காலைச் சந்திப் பூஜையாகும். இந்தப் பூஜை சூரியன் உதயமானதற்குப் பிறகு தொடங்கி நடைபெறும்.

**3.உச்சிக்காலம்**

எல்லா ஆலயங்களிலும் நடுப்பகலில் இந்த வழிபாடு நடைபெறும். இந்த வழிபாட்டின்போது மூலவருக்கு சிறப்பு அபிஷேக, ஆராதனைகள் நடைபெறும்.

குறிப்பாக இறைவனுக்கு மிகவும் பிடித்தமான நைவேத்தியம் இந்த உச்சிக்காலப் பூஜை சமயத்தில் படைக்கப்படும். பெரும்பாலும் மதியம் 12 மணிக்கு உச்சிக்காலப் பூஜை தொடங்கி நடத்தி முடிக்கப்படும்.

இந்தப் பூஜை முடிந்ததும் கோவில் நடை சாத்தப்படும். விழாக் காலங்களில் மட்டும் நடை சாத்துவதைத் தவிர்ப்பார்கள்.

**4.சாயரட்சை**

மதியம் 12 மணி பூஜையுடன் சாத்தப்படும் நடை மீண்டும் பிற்பகலில் திறக்கப்படும். பெரும்பாலான ஆலயங்கள் பிற்பகல் 4 மணிக்குத் திறக்கப்படும்.

நடை திறந்தும் மீண்டும் இறைவனை அலங்கரித்து ஆராதனைகள் செய்வார்கள். இந்த வழிபாட்டுக்குச் சாயரட்சை அல்லது மாலை சந்தி என்று பெயர்.

**5.அர்த்த ஜாமம்**

சாயரட்சை வழிபாடு முடிந்த 3 3/4 நாழிகைகள் கழித்து நடத்தப்படும் வழிபாட்டுக்கு அர்த்தஜாமப் பூஜை என்று பெயர்.

இந்தப் பூஜையிலும் அந்தந்த மூலவருக்கு உரிய மலர்களால் அலங்காரம் செய்து அவருக்கு விருப்பமான நைவேத்தியங்களைப் படைப்பார்கள்.

**6.பள்ளியறை**

இரவு 9 மணிக்குப் பிறகு பள்ளியறைப் பூஜை நடத்தப்படும். இந்த வழிபாட்டின் போது இறைவனது பாதம் அல்லது சயன உருவத்தைப் பல்லக்கில் வைத்து எடுத்துச் செல்வார்கள்.

பள்ளியறையில் வைத்து ஊஞ்சலில் வைத்து ஆட்டி பாட்டு பாடுவார்கள். சில ஆலயங்களில் பள்ளியறைக்குள் மூலவரை சேர்ப்பித்ததும் ஆலயத்தின் அன்றைய வரவு-செலவுக் கணக்குகளை இறைவன் முன்பு வாசிப்பார்கள். பிறகு தீபாராதனை காண்பித்து பள்ளியறையை மூடி விடுவார்கள்.

மறுநாள் காலை மீண்டும் உஷக்காலத்தில் பள்ளியெழுச்சி பாடல் பாடி இறைவனை எழுப்புவார்கள். பிறகு அன்றைய தின வழிபாடு தொடரும்.

இப்படி தினமும் 6 காலப் பூஜைகள் குறித்த நேரத்துக்குள் குறிப்பிட்ட ஆகம விதிகளுடன் ஆலயங்களில் தொடர்ந்து நடந்து வருகிறது.

இந்த 6 காலப் பூஜைகளின்போது சாங்கம், உபாங்கம், பிரத்யங்கம் ஆகிய 3 வகை பூஜை முறைகள் செய்யப்படும். அதாவது சாயங்கம் எனப்படும் அபிஷேகம், பாத்யம், அசமனியம், அர்க்கியம், ஆடை, ஆபரணம், சந்தனம், மலர் என்ற 8 வகை பூஜையும் வரிசையாகச் செய்யப்படும்.

அதுபோல உபாங்கத்தில் 10 வகை பூஜைகள் பரத்யங்கத்தில் 6 வகை பூஜைகள் செய்யப்படும். (தொடரும்)

## செய்தித்துளிகள்

### வெலிக்கடையில் விசேட சுற்றிவளைப்பு 11 கையடக்கத் தொலைபேசிகள் மீட்பு

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் தொலைபேசிகள் உட்பட சில பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது 11 கையடக்க தொலைபேசிகள், 4 சிம் அட்டைகள் மற்றும் 6 சார்ஜர்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (நி-4)

### மோட்டார் சைக்கிள் - லொறி விபத்து சிகிச்சை பலனின்றி ஒருவர் உயிரிழப்பு

(புத்தளம்)

புத்தளம் - கொழும்பு பிரதான வீதியின் நாகவில்லு பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் பங்கதெனிய பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய நபர் ஆவார்.

நேற்று முன்தினம் இரவு புத்தளத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று, எதிர்த்திசையில் பயணித்த லொறி ஒன்றுடன் மோதுண்டமையினாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதியை, அங்கிருந்தவர்கள் உடனடியாக புத்தளம் வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும் அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

விபத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-4)

### 2,429 பேர் நாட்டை வந்தடைந்தனர்

(கொழும்பு)

நேற்று முன்தினம் நாட்டுக்குள் வந்த 38 விமானங்கள் மூலம் 2,429 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் 574 பேர் நாட்டில் இருந்து வெளியேறி வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (நி-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 150 | 110 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 250 | 280 | 280 | 400 |
| தக்காளி | 250 | 240 | 200 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 70 | 50 |
| கோவா | 120 | 100 | 100 | 140 |
| கரட் | 160 | 220 | 180 | 240 |
| பூசணி | 80 | 100 | 80 | 80 |
| புடோல் | 160 | 160 | 140 | 150 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 | 100 |
| சின்ன வெங்காயம் | 200 | 180 | 250-350 | 240 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 130 | 140 |
| பாகற்காய் | 180 | 160 | 180 | 240 |
| வெண்டிக்காய் | 200 | 220 | 160 | 200 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 100 | 120 |
| பயற்றங்காய் | 180 | 160 | 180 | 200 |
| லீக்ஸ் | 160 | 140 | 140 | 160 |
| பீற்றூட் | 100 | 100 | 120 | 120 |
| கறிமிளகாய் | 200 | 250 | 250 | 240 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | 120 | 120 | 120 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | -- | 80 |
| கீரை - 1 பிடி | 40 | 25 | 40 | 40 |
| தேசிக்காய் | 150 | 120 | 120 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 80 | 60-80 | 80-100 |
| இராசவள்ளி | 250 | 240 | 250 | 200 |
| வெங்காயப்பூ | 120 | 100 | 120 | 160 |
| முள்ளங்கி | 60 | 80 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 50 | 60 | 40 | 40 |
| வல்லாரை | 40 | 100 | 30 | 30 |
| ஈரப்பலா | 140 | 100 | -- | 100 |

# அபிவிருத்தியை கோரி போராட்டம் இதுவரை எவரும் கண்டுகொள்ளவில்லை



(நெளுக்குளம்)

வவுனியா, பூந்தோட்டம் ஸ்ரீநகர் கிராம மக்களினால் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 9 ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டம் நேற்று 19 ஆவது நாளாக தொடர்ந்தது.

20 வருடங்களாகியும் தமக்கு காணி உரிமைப் பத்திரங்கள் வழங்கப்படவில்லை, உட்கட்டுமான வசதிகள் செய்து தரப்படவில்லை, மைதானம் இன்மை, வீட்டுத்திட்டம் வழங்காமை போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே குறித்த சத்தியாக்கிரகப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. பல வருடங்கள் ஆகியும் எமது கோரிக்கைகளுக்கு தீர்வு கிடைக்கவில்லை எனவும் தற்போது போராட்டத்தை முன்னெடுத்து 19 நாட்கள் கடக்கின்ற நிலையில் வன்னி மாவட்டத்தை பிரதிநிதித் துவப் படுத்தும் மக்கள் பிரதிநிதிகள் எவரும் தங்களது பிரச்சினைகள் தொடர்பாக கேட்டறியவில்லை எனவும் அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (5-4-299)

# தூர இடங்களுக்கான பேருந்து நிலையத்திலிருந்து சேவைகள் இன்று முதல் ஆரம்பம்

(நல்லூர்)

புதிதாக திறக்கப்பட்ட தூர இடங்களுக்கான பேருந்து நிலையத்திலிருந்து சேவைகள் இன்றிலிருந்து ஆரம்பமாக வுள்ளதாக வடக்கு மாகாண வீதிப் போக்குவரத்து அதிகார சபையின் முகாமைத்துவ சபை உறுப்பினரும் வடக்கு மாகாண தனியார் பேருந்து உரிமையாளர் சங்க தலைவருமான சி.சிவபரன் தெரிவித்தார்.

அண்மையில் புதிதாக திறக்கப்பட்ட தூர இடங்களுக்கான பேருந்து நிலையம் தொடர்பில் கருத்துரைக்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அண்மையில் புதிதாக திறக்கப்பட்ட தூர இடங்களுக் கான பேருந்து நிலையத்தில் பேருந்துகள் சேவையில் ஈடுபடுவது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் முக்கிய அரச அதிகாரிகளுடனான சந்திப்பு நீண்ட நாட் களாக இடம்பெற்று வந்த நிலையில் வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் யாழ்ப்பாண மாநகர முதல்வர் ஆகியோர் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக தனியார் போக்குவரத்து சங்க பேருந்துகள் இன்றிலிருந்து புதிதாக திறக்கப்பட்ட பேருந்து நிலையத்திலிருந்து தமது சேவையை ஆரம்பிக்கின்றன.

எனினும் அந்த சேவைக்கு இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துகளும் தமக்கு ஒத்துழைப்பினை வழங்க வேண்டுமெனவும் அத்தோடு இ.போ.ச. சாலை முகாமையாளர்கள் மற்றும் பிராந்திய முகாமையாளர் ஆகியோருக்கு வடக்கு மாகாண ஆளுநர், அரச அதிபர் மற்றும் யாழ்ப்பாண மாநகர முதல்வர் ஆகியோர் பூரண விளக்கமளித்து இ.போ. ச. பேருந்துகளையும் புதிதாக திறக்கப்பட்ட தூர இடங்களுக்கான பேருந்து நிலையத்திலிருந்து இணைந்து சேவையாற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு இணக்கப்பாட்டை ஏற்படுத்த முன்வர வேண்டும் என தெரிவித்தோடு பொதுமக்களுக்கு திருப்தியான சேவையினை வழங்கும் முகமாக புதிதாக திறக்கப்பட்ட பேருந்து நிலையத்தில் இருந்து தூர இடங்களுக்கான தனியார் பேருந்து சேவைகள் அனைத்தும் இடம்பெற உள்ளன எனவும் தெரிவித்தார். (5-4-33)

# கொடிகாமத்தில் ஒருவருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியில் கொடிகாமம் தெற்கு பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை வெளியான பி.சி.ஆர். முடிவுகளின் அடிப்படையில் கொடிகாமம் தெற்கைச் சேர்ந்த நபருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த நபர் தனிமைப்படுத்தலில் இருந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (5-4-30)



கோண்டாவில் மத்திய கிராம அபிவிருத்திச் சங்கம், மத்திய சனசமூக நிலையம் ஆகியன இணைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியின் அனுசரணையில் நேற்று ஞாயிற்றுக் கிழமை கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருமண மண்டபத்தில் இரத்த தானம் இடம் பெற்றது.

(படம்:- செ.ரவிசாந்)

# பொது நிறுவனங்கள் சமூகப் பணியில் ஈடுபட முன்வர வேண்டும்

(சாவகச்சேரி)

பொது நிறுவனங்கள் சமூகப் பணிகளில் ஈடுபட தாமாக முன்வர வேண்டும் எனச் சாவ கச்சேரி பிரதேச சபை தவிசாளர் க.வாமதேவன் தெரிவித் துள்ளார்.

அண்மையில் பிரதேச சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொது நிறுவனங்கள் சமூகப் பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் எனவும் பொது நிறுவனங்களை சமூகப் பணிகளில் ஈடுபட வைக்கும் பொறுப்பு உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு உள்ளது. அண்மையில் மட்டுவில் வடக்கு வில்சன் சனசமூக நிலையத்தினர் நிலையத்தின் 44 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பயன்படுத்தும் மீசாலை வடக்கு வேம்பிராய் இந்து மயானத்தில் சிரமதானப் பணியினை முன்னெடுத்தனர்.

இவ்வாறான சமூகப் பணிகள் முன்மாதிரியான செயற்பாடாக அமையும். இதே போன்று ஏனைய பொது நிறுவனங்களும் சமூகப் பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என அவர் மேலும் கேட்டுக் கொண்டார். (5-4-30)

# வீதி புனரமைப்பு

(சாவகச்சேரி)

வடக்கு மாகாண சபையின் பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதி ஒதுக்கீட்டில் இருந்து சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குள் இரு வீதிகள் புனரமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாக சாவகச்சேரி பிரதேச சபையினர் தெரிவித்துள்ளனர்.

6.5 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் கைதடி ஊரியான் வீதியும் 6 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நாவற்குழி மேற்கு செங்கத்திடல் வீதியும் புனரமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மேலும் தெரிவித்துள்ளனர். (5-4-30)



சங்கானை பிரதேச இளைஞர் சம்மேளனமும் ஒன்று கூடுவோம் அமைப்பும் இணைந்து நடத்திய இளைஞர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி நெறி நேற்று முன்தினம் வலி.மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது. இப் பயிற்சி நெறியில் பங்குபற்றி அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வின் விருந்தினர்களாக முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சபா.குகதாஸ், வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர் நடனேந்திரன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் க.இலங்கேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(படம்:- கஜிந்தன்)

# சட்டவிரோத மீன்பிடி முறைகளை தடுக்க ஒன்றிணையும் மீனவர் சங்கப் பிரதிநிதிகள்

(பனிக்கன்குளம்)

சட்டவிரோத மீன்பிடி முறைமைகளைத் தடுக்க வடக்கு மாகாணத்தின் நான்கு மாவட்டங்களின் மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் முல்லைத்தீவு மீனவர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் யாழ்ப்பாண மீனவர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசத்தில் நேற்று முன்தினம் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. குறித்த சந்திப்பில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் காரணமாக மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டது. குறித்த சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதில் ஒவ்வொருவர் ஒவ்வொரு நிலைப்பாட்டில் இருந்ததாகவும் எனவே வவுனியா தவிர்ந்த நான்கு மாவட்ட மீனவ அமைப்பு பிரதிநிதிகளும் இணைந்து ஒட்டுமொத்தமாக சட்டவிரோத மீன்பிடி முறைகளைத் தடுக்கும் முகமாக ஒரு நிலைப்பாட்டுக்கு வரும் முகமாக குறித்த சந்திப்பு இடம்பெற்றது

முல்லைத்தீவை தொடர்ந்து கிளிநொச்சி, மன்னார் மாவட்ட மீன்பிடி அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடி எதிர்காலத்தில் ஒற்றுமையாக ஒருநிலைப்பாடாக அனைத்து மாவட்டங்களிலும் சட்டவிரோத நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவதற்காக செயற்படப் போவதாக மீனவ அமைப்பின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (5-4-281)

# விசேட பூஜை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் உலகெங்கிலும் வாழும் மக்கள் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீள்வதற்காக இறை ஆசி வேண்டி விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில் நாளை 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு குரும்பசிட்டி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவிலில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

விசேட பூசை வழிபாடுகளின் நிறைவில் கோவிலின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ இ.கணேஸ்வரக் குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயணமும் இடம்பெறவுள்ளன. இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம்பெறும் "ஆலய தரிசனம்" நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரடி ஒளிபரப்பு செய்யப்படும். (5-4)

மதப் பிடிவாதத்துக்கு மூளையில்லை, அதனால் யோசிக்க முடியாது. இதயமில்லை, அதனால் உணர முடியாது. – ஓகானல்

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

# அடுத்த தேர்தலில் கோட்டாபய ராஜபக்ச சிங்கள பௌத்த வாக்குகளை பெற முடியாது

## அந்துரலிய ரத்ன தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் பௌத்த சிங்கள வாக்காளர்களில் பெரும்பாலான வாக்குகளை பெற்றுக் கொண்டவர் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச என பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

எனினும் அவர் மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால், அந்த வாக்குகளை பெற்றுக் கொள்வதற்கான எந்த வாய்ப்பும் இல்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

இதனால், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற வேண்டுமாயின், சிறுபான்மையின வாக்காளர்களை கவர்வது கட்டாயம்.

இதன் காரணமாக முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு தேவையான வகையில் அரசாங்கத்தின் சில தீர்மானங்கள் மாற்றமடைகின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஞா)

# உயர்தர பரீட்சை பெறுபேறுகளை ஏப்ரலில் வெளியிடத் தீர்மானம்

## கல்வி அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக கல்வியமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித் துள்ளார்.

இதன்படி, உயர்தரப் பரீட்சையில் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை, விரைவில் பல்கலைக்கழகங்களுக்கு உள்ளீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இதற்கமைய, ஏப்ரலில் வெளியிடப்படும் பெறுபேறுகளுக்கு அமைய பல்கலைக கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்களை, எதிர்வரும் செப்டெம்பரில் பல்கலைக் கழகங்களில் இணைத்துக்கொள்ள உள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, 2020ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில், இதன்பெறுபெறுகள் எதிர்வரும் ஜூனில் வெளியிட எதிர பார்த்துள்ளதாக அவர் கூறியுள்ளார். (ம-3)

# மன்னார் மீனவர்கள் இருவர் கடற்படையினரால் மீட்பு

(மன்னார்)

கடந்த 23ம் திகதி மன்னாரிலிருந்து கடலுக்கு மீன்பிடி நடவடிக்கைகளுக்காக சென்ற நிலையில் நடுக்கடலில் தத்தளித்த இரண்டு மீனவர்களை இலங்கை கடற்படை நேற்று முன்தினம் மீட்டுள்ளது.

கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்களத்தினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைய, கொழும்பு, கடல் சார் மீட்பு ஒருங்கிணைப்பு நிலையத்தின் உதவியுடன் இந்த மீட்புப் பணி முன்னெடுக்கப்பட்டதாக கடற்படை தெரிவித்துள்ளது.

மீன்பிடி நடவடிக்கைகளுக்காக சென்றிருந்த மீனவர்களின் படகு தொழிநுட்ப கோளாறு காரணமாக கடலுக்குள் அடித்துச்செல்லப்பட்டதாக கடற்படை மேலும் தெரிவித்துள்ளது.

கொழும்பு மத்திய நிலையத்தின் மூலம் சென்னை, கடல் சார் மீட்பு ஒருங்கிணைப்பு நிலையத்தின் கவனத்திற்கு இந்த விவகாரம் கொண்டு வரப்பட்டதை அடுத்து, இந்திய கடலோர பாதுகாப்பு படை கப்பல் ஒன்று, சர்வதேச கடல் எல்லையை அடைய, அந்த மீனவர்களுக்கு உதவி செய்தது. (ஞா)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## மன்னிப்பின் மேன்மை



இப்போது ஒரு வினா எழுப்பலாம் ஒருவர் ஒரு பெரிய கொடுமையை செய்கிறார். அவருக்கு எதிராகக் கூட சினம் கொள்ளக் கூடாதா? என்று கேட்கலாம். சினத்தினால் எங்கும் ஒரு நன்மையும் வந்ததாக இது வரை வரலாறில்லை. தீயவர்களையும், கொடியவர்களையும் மன்னித் தல் தான் சிறந்தது. அன்றி, பதிலுக்குப்பதில் அல்லது பழிக்குப்பழி என்று இறங்கினால் அதற்கு முடிவு எங்கே?

நமக்கு ஒருவர் கெடுதல் செய்தாலும் நாம் நம் வயம் இழக்கலாமோ? நம் வயம் இழந்தால் தானே சினம் வரும்? நாம் நாமாகவே இருந்தால் அதுவே அவருக்கு ஒரு பாடமாகி மீண்டும் இத்தகைய தீங்கு செய்யாதிருக்க ஒரு நல் வாய்ப்பாகும்.

இன்னும் ஒரு படி மேலே சென்று தீங்கு செய்தவருக்கும் நன்மை செய்து விட வேண்டுமென்றும் நமது பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள். அவ்வாறு செய்தால் சினத்திற்கு அங்கு இடமே இல்லை.

அப்படி நமக்குத் துன்பஞ் செய்தார் மேலும் சினம் கொள்ளாததோடு அவருக்கு நன்மையும் செய்யவில்லை என்றால், அருள்துறையில் இருந்து என்ன பயன்? சினம் ஒழிந்த இடத்தில் தான் இந்தப் பெருந்தன்மை வரும்.

நான் எவ்வளவோ பொறுமையாகத்தான் இருந்தேன். எனக்குச் சினம் வரும்படியாகப் பண்ணிவிட்டார்கள் என்று சொல்லித் தப்பிக்க முயல வழியில்லை. பொறுமைக்கு எல்லை உண்டு என்பது சுத்தத் தவறு. பொறுமைக்கு எல்லை, வரையறை செய்தால் அது தான் வஞ்சம். ஏன், பொறுமை கடலினும் பெரிது எனும் கருத்துங்கூடத் தவறு தான். பொறுமையை எந்த அளவுக்கும் உள்ளடக்க முடியாது. எல்லை என்பதே இல்லா இறைநிலையைப் போலவே எல்லை என்பது இல்லாததே பொறுமை.

# நீதியைத் தகனம் செய்வதற்காக தகனம் அடக்கம் செய்யப்படுகிறது

கொரோனாத் தொற்றுக்கு ஆளாகி இறப்பவர்களைத் தகனம் செய்வது என அரசாங்கம் எடுத்த தீர்மானத்தால் முஸ்லிம் மக்கள் வெகுண்டெழுந்தனர்.

அவர்களின் மார்க்கத்தின்படி இறந்த வரை மண்ணில் அடக்கம் செய்ய வேண்டும்.

இங்குதான் அரசாங்கத்தின் தீர்மானம் இஸ்லாமிய மார்க்கத்துக்கு இடையூறாக அமைய, முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் இஸ்லாமிய அமைப்புகள் என அனைத்து முஸ்லிம் தரப்புகளும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தின.

இருந்தபோதிலும் அரசாங்கம் தனது முடிவை இம்மியும் தளர்த்தவில்லை. கொரோனாத் தொற்றினால் இறந்தவர்களைத் தகனம் செய்வது என்றால், அது அனைவருக்கும் பொதுவான சட்டமே.

இதில் முஸ்லிம்களுக்கு என விசேட சலுகைகள் எதுவும் வழங்க முடியாது என பௌத்த தேரர்கள் முழங்கினர்.

இந்த நிலையில், பொத்துவில் முதல் பொலிகண்டிவரை நடந்த தமிழ் மக்களின் எழுச்சிப் பேரணிக்கு முஸ்லிம் சகோதரர்கள் தமது தார்மீக ஆதரவை வழங்கியபோது, அரசாங்கம் அதிர்ந்து போனது.

தமிழ் – முஸ்லிம் மக்கள் ஒன்றுபட்டால் அது தமக்கு நல்லதல்ல என்று கருதிய அரசாங்கம் இவ்வாறானதொரு சூழமைவு ஏற்படுவதை அனுமதிக்கமுடியாது என்ற எண்ணத்தோடு; பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில், கொரோனாத் தொற்றுக்கு முஸ்லிம்கள் பலியாக நேரிட்டால், அவர்களை அடக்கம் செய்ய முடியு மென அறிவித்தார்.

பிரதமரின் இந்த அறிவித்தல் சில காலம் பெரும் சர்ச்சையை, குழப்பத்தை ஏற்படுத்தியது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் மேற்போந்த பாராளுமன்ற உரை அவரது தனிப்பட்ட கருத்து.

சடலத்தை எரிப்பது என்ற தீர்மானத்தில் மாற்றம் செய்வதாயின் அதற்கென நியமிக்கப்பட்ட குழுவே அதுபற்றி முடிவெடுக்கும் என்பதான அறிக்கைகள் ஆட்சித் தரப்பினரால் வெளியிடப்பட்டன.

பிரதமரின் உரையை சில பௌத்த தேரர்கள் எதிர்த்தனர்.

ஆனால் இப்போது ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் ஜெனிவாவில் ஆரம்பமாகி இருக்கின்ற இவ்வேளையில்,

கொரோனாவால் இஸ்லாமியர் ஒருவர் உயிரிழந்தால், அவரின் உடலைத் தகனம் செய்யாமல் அடக்கம் செய்ய முடியும் என்ற அறிவிப்போடு வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

அதாவது ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் இஸ்லாமிய நாடுகளின் ஆதரவைப் பெறுவதற்காக இப்படியொரு ஏற்பாடு நடந்திருக்கிறது.

என்ன செய்வது, நீதியை எரிப்பதற்காக தகனத்தை தாட்டுவிடுகின்ற ஒரு தந்திரோபாயம் கனகச்சிதமாக நடந்தேறுகிறது.

ஒரு நீதி மறுக்கப்படுவதை – எரிக்கப்படுவதை யார்தான் கண்டுகொள்ளப் போகிறார்களோ யாமறியோம் பராபரமே!

## சொகுசு காரில் போதைப்பொருள் விற்பனை

### தம்பதியினருக்கு விளக்கமறியல்

(ஏறாவூர்)

சொகுசு காரில் சென்று போதைப்பொருள் விநியோகம் மற்றும் விற்பனையில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட தம்பதியினர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

தங்களுக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய கடந்த வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு- கொழும்பு நெடுஞ்சாலையில் சொகுசுக் காரொன்றை வழிமறித்துச் சோதனையிட்டபோது அக்காரில் பயணம் செய்த இளம் தம்பதியினரிடமிருந்து ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தத் தம்பதியினர் மிகவும் சூட்சுமமான முறையில் பாரிய அளவில் போதைப் பொருள் விநியோகம் மற்றும் வியாபாரத்திலீடுபட்டு வருவதாகக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து சந்தேக நபர்களின் நடமாட்டத்தை அவதானித்து வழிமறித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது சந்தேக நபர்கள் பயணித்த சொகுசுக் காரும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களை ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது அவர்களை எதிர்வரும் மார்ச் மாதம் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (நி-4)

## யுத்த காலத்தில் புலிகளிடம் இருந்து தப்பவே இராணுவம் உள்ள பகுதிக்கு மக்கள் வந்தனர்

### புதுக்கதை அளக்கும் அலி சப்ரி

(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை பக்கச்சார்பானதென்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய சிறப்பு நேர்காணலில் இதை தெரிவித்தார். தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஐ.நா.மனித உரிமை அமர்வில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்படும் பிரேரணை இலங்கைக்கு பாதகமாக அமையாத வகையில் மாற்றம் செய்யப்படுமென்று நம்புகிறேன்.

வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன உள்ளிட்ட குழு அந்த நாடுகளுடன் பேசி உரிய மாற்றங்களை செய்யுமெனவும் அவர் தெரிவித்தார்.



மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை பக்கச்சார்பானது. யுத்தத்தின் போது மனித உரிமை மீறல்கள் நடந்ததாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். தமிழ் மக்களுக்கு எதிராக யுத்தம் மேற்கொள்ளப்படவில்லை.

புலிகளிடமிருந்து தப்பி மக்கள் இராணுவம் உள்ள பகுதிக்குத்தான் வந்தனர். அவர்களுக்கு அரசாங்கத்தினால் பாதிப்பு இருந்தால் புலிகள் இருக்கும் பக்கத்திற்குச் சென்றிருப்பர். எனவே அவரின் குற்றச்சாட்டு பக்கச்சார்பானது.

இலங்கைக்கு எதிரான பிரேரணை இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை. வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன மற்றும் துறைசார் நிபுணர்கள் குழு அந்த நாடுகளுடன் பேசி தேவையான மாற்றங்களை செய்யும்.

அந்தப் பிரேரணை அதே போன்று சமர்ப்பிக்கப்படாது என்று நம்புகிறேன். நாட்டுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இதன் முடிவு அமையும்.

தற்போதைய நிலைமைகள் தொடர்பில் உண்மை நிலை அந்த நாடுகளுக்கு தெளிவுபடுத்தப்படும். அவர்கள் பகுத்தறிவுடன் சிந்தித்து அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவார்கள் என நம்புகிறோம் என்றும் குறிப்பிட்டார். (நி-4)

## அரசியல் தன்மை,தேசிய ஒற்றுமையை இலங்கை நிலை நிறுத்தும்

### சீனா நம்பிக்கை

(கொழும்பு)

இலங்கை அரசியல் ஸ்திரத்தன்மையையும் தேசிய ஒற்றுமையையும் நிலை நிறுத்தும் என நம்புவதாக சீனா தெரிவித்துள்ளது.

பீஜிங்கில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சீனாவின் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் வாங் வென்பின் இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது அமர்வில் நடைபெற்ற இலங்கை தொடர்பான நாடு சார்ந்த தீர்மானம் குறித்த கலந்துரையாடலின்போது இலங்கையின் மனித உரிமை நிலைமை குறித்து சில மேற்கத்தேய நாடுகள் கேள்வி எழுப்பின.

இவ்விடயம் தொடர்பிலேயே சீனாவின் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் வாங் வென்பின் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறியுள்ளதாவது, "ஒரு நட்பு நாடாக இலங்கை, அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய ஒற்றுமையை நிலைநிறுத்தும். மேலும் தேசிய வளர்ச்சியில் அதிக சாதனைகளை இலங்கை செய்யும் என்றும் சீனா நம்புகிறது.

மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் நிலையான சமூக பொருளாதார வளர்ச்சியை முன்னேற்றுவதற்கும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் பாதிக்கப்படக்கூடிய குழுக்களின் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிப்பதற்கும் தேசிய நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்கும் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கும் இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகளை சீனா பாராட்டுகிறது.

இதேவேளை அரசியல் நோக்கங்களுக்காக மனித உரிமைகளைப் பயன்படுத்துவதை சீனா கடுமையாக எதிர்க்கின்றது. அனைத்து நாடுகளும் ஐ.நா.சபையின் நோக்கங்களையும் கொள்கைகளையும் கடைப்பிடிக்க வேண்டும். ஏனைய நாடுகளின் இறையாண்மையை மதிக்க வேண்டும்.

மேலும், ஏனைய நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடும் நகர்வுகளை நிராகரித்து அரசியல் அழுத்தத்தை செலுத்த வேண்டும். அனைத்து நாடுகளும் ஆக்கபூர்வமான உரையாடல் மற்றும் ஒத்துழைப்பு ஊடாக மனித உரிமைத்துறையில் உள்ள வேறுபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டும்" என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

## குடிபோதையில் நின்ற 15 பேர் கைது

(ஹற்றன்)

உடுகம நீதவான் நீதி மன்றம் முன் குடிபோதையில் முறைகேடாகச் செயற்பட்ட 15 இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் பகுதியில் உள்ள ஆற்றில் நீராட வந்த இவர்கள் குடிபோதையில் நீதவான் நீதிமன்றம் முன்னிலையில் முறைகேடாகச் செயற்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் ஹக்மீமன பகுதியை சேர்ந்தவர்கள் என கூறப்படுகின்றது. (நி-4)

## சஜித்-சம்பிக்க இடையே பிளவு?

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்திக்குள் சஜித் பிரேமதாஸவுக்கும் பாட்டலி சம்பிக்க ரணவக்கவுக்கும் இடையே கருத்து மோதல் உருவாகி வருவதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சிக்குள் மற்ற மூத்த உறுப்பினர்களைப் போலவே பாட்டலிக்கும் பதவி வழங்கப்பட்டுள்ளது.

எனினும் அவர் தமது பதவியை இன்னும் ஏற்கவில்லை. இதன் காரணமாகவே இவர்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-4)

## கோர விபத்தில் இருவர் உயிரிழப்பு





(கொழும்பு)

வாரியபொல-கடுபொத பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர். முச்சக்கர வண்டி ஒன்று பொலிஸாரின் ஜீப் ரக வாகனத்துடன் மோதுண்டதால் இந்த விபத்து நேர்ந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்தில் 4 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (நி-4)




## சம்பள விவகாரம், காணி உரிமை உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து போராட்டம்

(ஹற்றன்)

பெருந்தோட்ட தொழிலாளர்களின் அடிப்படை சம்பளத்தை ஆயிரம்ரூபாயாக வழங்க வேண்டும் மற்றும் காணி உரிமை, வீட்டு உரிமை வழங்க வேண்டும் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை கொஸ்லந்தை நகரில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

உழைப்புக்கு ஏற்ற ஊதியத்தை பெறக்கூட சுதந்திரமற்ற மக்களாக தோட்டத் தொழிலாளர்கள் விளங்குவதால் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து தோட்டத் தொழிலாளர் மத்திய நிலையத்தினால் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நியாயமான சம்பளத்தை இந்த அரசாங்கம் வழங்க வேண்டும், ஏனைய மக்களைப் போல சுதந்திரமாக வாழ வழி செய்ய வேண்டும், காணிஉரிமை, வீட்டு உரிமை, சுகாதாரம், கல்விக்கான வளங்கள், முகவரிகளைப் பெற்றுக்கொடுத்தல் போன்ற கோரிக்கைகளையும் அவர்கள் இதன்போது முன்வைத்தனர். (நி-4)

## ஐ.நா முன்றலில்...

கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த நிலையில் ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை கூட்டத் தொடரின் பின்னணியில் புலம்பெயர் நாடுகளிலும் அறவழி போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் இலங்கையில் இடம்பெற்ற தமிழின அழிப்புக்கு சர்வதேச சுயாதீன விசாரணை உட்பட்ட கோரிக்கைகளை முன்னிறுத்தி ஜெனிவா ஐ.நா மனித உரிமை பேரவை முன்றலில் தாயக செயற்பாட்டாளர்கள் நடத்திவரும் உண்ணாநிலைப் போராட்டம் இன்று எட்டாவது நாளாக தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## வடக்கில் 7...

களில் நால்வர் மன்னார் நகரில் கடந்த வாரம் அடையாளம் காணப்பட்ட சலூன் உரிமையாளருடன் நெருக்கமான தொடர்பிலிருந்தவர்கள். மற்றையவர் மன்னார் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக சென்ற பெண்.

வவுனியாவில் ஏற்கெனவே தொற்றாளராக அடையாளம் காணப்பட்டவருக்கு மீண்டும் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளார். (ஞா-18.33)

## ஆய்வுகூட...

உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த உத்தியோகத்தரின் மனைவியான ஆசிரியை நேற்று முன்தினம் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டிருந்தார்.

குறித்த தொழில்நுட்ப உத்தியோகத்தர் அண்மையில் கொழும்பிலிருந்து திரும்பியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஞா-18.33)

## கொரோனாத்...

கொரோனாத் தொற்று நிலைவரம் தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்குறித்த கருத்தை அவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்று நிலைமையை அவதானிக்கும்போது சற்று அபாய நிலையில்தான் காணப்படுகிறது.

பொதுமக்கள் தற்போதைய நிலையில் மிக மிக அவதானமாக இருப்பது முக்கியம். முதலில் வெளிமாவட்டத்திலிருந்து வருவோரால் மாத்திரமே தொற்று பரவுவதாக கருதப்பட்டது.

எனினும் தற்போது யாழ்.மாவட்டத்தில் உள்ளோரால் தொற்று உறுதி செய்யப்படுகின்ற நிலையானது மிகவும் அபாயகரமான நிலையாக காணப்படுகின்றது.

எனவே யாழ்ப்பாண மாவட்டத்தில் தடுப்பூசி வழங்கப்படும் வரை மிகவும் மக்கள் அவதானமாக செயற்பட வேண்டியுள்ளது என்றார். (ஞா-33)

## மரணச் சடங்கில்...

ஒரு மணியளவில் மரணக்கிரியை நடந்த வீட்டில் ஆச்சிபுரம் மற்றும் மதுரா நகரை சேர்ந்த இரு பகுதியினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது.

இதில் இருவருக்கிடையே ஆரம்பத்தில் ஏற்பட்ட வாய்த் தகராறு பின்னர் கைகலப்பாக மாறியுள்ளது.

இச் சம்பவத்தில் 20, 22, 25, 28, 30 ஆகிய வயதினையுடைய ஆச்சிபுரத்தினை சேர்ந்த நால்வரும் மதுரா நகரினை சேர்ந்த இருவரும் காயமடைந்துள்ளார்கள்.

இச் சம்பவம் தொடர்பாக சிதம்பரபுர பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஞா-299)

## கூரிய ஆயுதத்...

தால் தாக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் கிளிநொச்சி கச்சேரி வீதியைச் சேர்ந்த அப்துல் ரகுமான் தயா (வயது-7) என்ற சிறுவனே உயிரிழந்துள்ளார்.

கொல்லப்பட்ட சிறுவனின் தாயார் கடந்த 20ஆம் திகதி மட்டக்களப்பு சென்றுள்ளார். சிறுவனுக்கு 9 வயதில் மூத்த சகோதரனும் 4 வயதில் இளைய சகோதரனும் உள்ளனர்.

சிறுவனின் தந்தை தனது மூத்த சகோதரனின் வீட்டில் மூன்று பிள்ளைகளையும் கைவிட்டு தலைமறைவாகியுள்ளார். அவர் தலைமறைவாகிய நிலையில் மூத்த சகோதரனின் வீட்டில் மாடு ஒன்றும் திருட்டுப் போயுள்ளது.

அதனால் தனது சிறிய தந்தை மாட்டை திருடிவிட்டு தப்பித்துள்ளார் என உடன்பிறவா சகோதரர்கள் மூவரையும் 17 வயது இளைஞன் கடுமையாகத் தாக்கி சித்திரவதை செய்துள்ளார்.

அதில் கடந்த 22ஆம் திகதி 7 வயது உடன்பிறவா சகோதரனை ஆட்கள் அற்ற வீட்டுக்கு அழைத்துச் சென்ற இளைஞன், மாட்டை கேட்டு தாக்கியுள்ளார். அதனால் தாக்குதலுக்குள்ளான சிறுவன் சுயநினைவற்று நிலத்தில் சுருண்டு வீழ்ந்துள்ளார்.

அதனால் சிறுவனை அந்த இடத்தில் கைவிட்டு இளைஞன் வீடு திரும்பியுள்ளார்.

வீடு திரும்பாத சிறுவனை உறவினர்கள் தேடிச் சென்றபோது நிலத்தில் சுயநினைவற்று கிடந்துள்ளார். அதனால் சிறுவன் கிளிநொச்சிவைத்தியசாலையில் உறவினர்களால் சேர்க்கப்பட்டார்.

சிறுவன் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். எனினும் 5 நாட்கள் தொடர் சிகிச்சை பயனளிக்காத நிலையில் சிறுவன் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

மரண விசாரணையை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (ஞா-100)

## மாகாண சபை...

புதன்கிழமை சந்தித்து ஜனாதிபதி பேசவுள்ளதாக ஆங்கில வார இதழ் நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

கோவிட்-19 தொற்று நோய் நெருக்கடிக்கு மத்தியில் மாகாண சபைத் தேர்தல்களை விரைவாக நடத்துவது சாத்தியமில்லை என ஆளும் கட்சியான பொதுஜன பெரமுன முன்னர் கருத்து வெளியிட்டிருந்தபோதும் தேர்தலை நடத்த ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாக தெரிய வருகிறது. (ஞா)

## உணவு தவிர்ப்பு...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர், வடக்கு - கிழக்கு சிவில் சமூக அமைப்புக்களின் இணைத் தலைவரும் நல்லூர் சிவகுரு ஆதீன பீடத்தின் முதல்வருமான தவத்திரு.வேலன் சுவாமிகள் மற்றும் இரு அருட்தந்தையர் ஆகியோர் இணைந்து குறித்த போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை, ஜெனிவாவில் தற்போது ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் வருடாந்தக் கூட்டத் தொடர் இடம்பெற்று வரும் நிலையில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து பிரித்தானியாவில் அம்பிகை செல்வகுமார் எனும் தமிழ்ப் பெண் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

இந்நிலையில் அவருக்கு ஆதரவாக இலங்கையை சர்வதேச நீதிமன்றத்தில் பாரப்படுத்துமாறு கோரி மேற்படி போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ஞா-18.33)

## ஹெரோயினுடன்...

கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றையடுத்து குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக தெல்லிப்பளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஞா)

## சர்வதேச விசார...

உறுதி என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் நடந்த நிகழ்வு ஒன்றில் பேசியபோது அவர் மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஈஸ்டர் தாக்குதல் அறிக்கையானது பூரணமானது கிடையாது என்றும் அவர் குறிப்பிட்டார். (ஞா)

## 7 பேர்...

சேவைகள் பணிப்பாளர் நாயகம் நேற்று உறுதிப்படுத்தினார்.

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 471 ஆக அதிகரித்துள்ளது. (ஞா)

## இன்று...

விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை இன்று ஆரம்பமாகிறது.

பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகியிருப்பதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்திருக்கின்றது.

எதிர்வரும் 10ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்த பரீட்சையில் 6 லட்சத்து 22 ஆயிரத்து 352 பேர் தோற்றவுள்ளனர். இவர்களில் 4 லட்சத்து 33 ஆயிரத்து 746 பேர் பாடசாலை பரீட்சார்த்திகளாவர். (ஞா)

### சேவன

திகதி 28/02/2021
சீட்டிழுப்பு இலக்கம் 318
S 22 27 33 50

### தரு திரி சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 28 திகதி 28/02/2021
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 04 51 61 65
தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

திகதி 2021/02/28
சீட்டிழுப்பு இலக்கம் 4412
D 4 9 0 4 5 6

### கொவிசெத

சீட்டிழுப்பு திகதி 28.02.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2707
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 03 12 69 78

### தன நிதானய

திகதி -2021.02.28
சீட்டிழுப்பு இலக்கம் - 449
A 21 42 50 52

### அத கோடிபதி

கிழமை: ஞாயிறு
சீட்டிழுப்பு இல: 1208
வர்ணம்: பச்சை
சீட்டிழுப்பு திகதி: 28.02.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 112,657,800
வெற்றி இலக்கங்கள் 16 27 69 72
ஆங்கில எழுத்து J

### சனிதா

கிழமை: ஞாயிறு
சீட்டிழுப்பு இல: 3538
வர்ணம்: இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 28.02.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 34,919,671
வெற்றி இலக்கங்கள் 18 35 39 54
ஆங்கில எழுத்து D

### ராசி

சுப்பர் ஜக்பொட் 2,000,000/=
வெற்றி இலக்கங்கள் 22 24 27 29
துலாம்
திகதி: 28.02.2021
வெற்றி வாரம்: 3089
வர்ணம்: ஊதா
ரூ. 11,487,947

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1382
நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 28/02/2021
தினம் ஞாயிறு
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் J 34 62 64 75
அடுத்த சுப்பர் ஜக்பொட 71,445,089/=

### ஜய

Z 23 56 65 75
696
மஞ்சள்
28.02.2021
ஞாயிறு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 76,285,025
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

### மொட்டுக்கட்சி மீது அதிருப்தி

## தனிவழி செல்ல தயாராகும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் செயற்பாடுகளால் கடும் அதிருப்தியில் இருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மொட்டு அணியினரின் செயற்பாடுகளை வெளிப்படையாகவே விமர்சித்து வருகின்றது.

தமது கட்சி உறுப்பினர்களுக்கு உரிய கவனிப்பு இல்லை எனவும், தேர்தலுக்காக மட்டுமே தமது கட்சி பயன்படுத்தப்படுகின்றது எனவும் சுதந்திரக் கட்சிக்காரர்கள் ஊடகங்களிடம் தமது உள்ளக்குமுறல்களை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலின் போது சஜித் அணியுடன் இணைந்து போட்டியிடவேண்டும், தற்போது ரணில் தரப்பு அவர்களுடன் இல்லை என்பதால் கூட்டணி சாத்தியமாகும் எனக் கட்சி உறுப்பினர்கள் சிலர், சு.கவின் மத்திய செயற்குழுவிடம் யோசனை முன்வைத்துள்ளனர்.

அத்துடன், மொட்டுக் கட்சியுடன் பேச்சு நடத்தி பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என மேலும் சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர். இதனால் சு.கவுக்குள்ளும் கருத்து மோதல் வலுத்துள்ளது.

விரைவில் தீர்க்கமானதொரு முடிவு எடுக்கப்படவுள்ளது என அறியமுடிந்தது. (ஞா)

## தடுப்பூசிகளை இந்தியாவிடம் இருந்து பெறுவதை நிறுத்துகிறது அரசாங்கம்

### இராஜாங்க அமைச்சர் ஜயசுமன அறிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து இது வரை காலமாக பெற்றுக்கொண்ட ஒக்ஸ்போர்ட் -அஸ்ட்ரசெனிகா கோவிட் -19 வைரஸ் தடுப்பூசிகளை இனிமேல் இங்கிலாந்தின் பிரதான நிறுவனத்திடம் இருந்தே பெற்றுக்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும், அதற்கான அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளதாகவும் ஔடத உற்பத்திகள், விநியோக ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

ரஷ்யாவின் ஸ்புட்னிக் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளும் இறுதிக்கட்ட பேச்சுவார்த்தை நிறைவடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் பொதுமக்களுக்கு பயன்படுத்த வெளிநாடுகளில் இருந்து கோவிட் -19 வைரஸ் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளும் வேலைத்திட்டம் குறித்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

இப்போது வரையில் நான்கு இலட்சம் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன. அடுத்த கட்டத்தில் மேலும் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ரஷ்யாவின் ஸ்புட்னிக் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளும் பேச்சுவார்த்தைகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. விரைவில் அவற்றை நாட்டுக்கு கொண்டுவருவோம். சீனாவின் இரண்டு தடுப்பூசிகள் குறித்தும் ஆராயப்பட்டு வருகின்றது.

ஆனால் இப்போது வரையில் சீனா எமக்கு கொடுத்துள்ள பரிசோதனை மாதிரிகள் போதுமானதாக இல்லை. எனவே அது குறித்தும் சீனாவுடன் தொடர்ச்சியாக பேசி வருகின்றோம் என்றார். (ஞா)

## தமிழ்த் தேசியப் பேரவை உருவாக்கம் ஒருவாரத்துக்கு பிற்போடப்பட்டது

### சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் தேசிய நிலைப்பாட்டில் இயங்கும் கட்சிகளை இணைத்து உருவாக்கப்படவுள்ள தமிழ் தேசிய பேரவை உருவாக்கும் பணிகள்ஒருவாரம்பிற்போடப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் கடந்த வெள்ளிக்கிழமை கூடிய தமிழ்த் தேசியப் பரப்பில்உள்ள அரசியல் கட்சிகள் யாவும் ஐக்கியம் அவசியம் என்பதில் உறுதியாக இருந்ததோடுஅதில் கொள்கை அளவிலும் இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளன. முன்னதாக 28 ஆம் திகதி தமிழ்த் தேசியப் பேரவையை கட்டமைப்பதற்கான கலந்துரையாடலைநடத்துவதென ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்த போதும், ஒவ்வொரு கட்சிகளும் தமது கட்சியின் உயர்மட்டக்குழுக்களை கூட்டி அது தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்கு

கால அவகாசம் தேவையாக இருப்பதாக கடந்த 26 ஆம் திகதி வவுனியாவில் நடைபெற்ற கூட்டத்தில் கூறப்பட்டது.

ஆகவே இதில் பங்கேற்பதற்கு கொள்கை அளவில் இணங்கியுள்ள கட்சிகள் அனைத்தும் தமது கட்சியின் சார்பில் உத்தியோக பூர்வமான பேச்சுக்களை முன்னெடுத்து இறுதி தீர்மானங்களை அறிவிக்க வேண்டும் என்று அக்கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் இடையே இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதனடிப்படையில் தமிழ்த் தேசியப் பேரவை தொடர்பில் இறுதி தீர்மானங்களை எடுக்கும் கலந்துரையாடலை ஒருவாரத்தின் பின்னர்

நடத்துவதற்கு எதிர்பார்ப்பதாக தமிழ்த் தேசியக் கட்சியின் செயலளர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார். (ஞா)


**யாழ்ப்பாணத்தில் காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதியில் ஆறுகால் மடம் மெயின் றோட்டுடன் (48) பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு

[ யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 2 Km தூரத்தில் ]

இரண்டு பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.

(5616)

குரு : 077 288 0152
076 857 7043
077 468 3354

**மணமகள் தேவை**

1983 Hindu, கௌரவ குடும்பம் மக நட்சத்திரம் யாழில் உள்ள பிரபல சட்டத்தரணிக்கு அழகிய மணமகள் தேவை. (5961)

076 068 4184

**விற்பனைக்கு**

LG 55 Inches TV Smart LED With Wall Mount

விற்பனைக்கு உண்டு. (5947)

077 285 0585

**காணி தேவை**

யாழ். மாநகர சபை, கோப்பாய், நல்லூர் பிரதேச சபைகளுக்கு உட்பட்ட இடத்தில் 20 - 30 வரையான பரப்பளவு காணி தேவை. (5616)

076 221 2037

**காணி விற்பனைக்கு**

யாழ். கோப்பாயில் நாவலர் பாடசாலைக்கு அருகாமையில் 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. ( நிலப்பரப்பு ) (5969)

(இரண்டு பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.)

பருத்தித்துறை வீதியில் இருந்து 40 மீற்றர் நடை தூரத்தில் உள்ளது.

077 805 1655, 077 596 3845

**வீட்டு உணவு**

யாழ்.மத்தியில் பீஷா கட்டிற்கு அருகாமையில் நீங்கள் விரும்பத்தக்க வகையில் ஆரோக்கியமான முறையில் சமைத்த மதிய உணவு பெற்றுக் கொள்ளலாம். (5892)

(காலை 10.00 மணிக்கு முன்னர் அறியத்தரவும்.)

077 569 1503



**அண்ணா** EXPRESS Courier Services

விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்

லண்டன் 1000/= (C-1948)

070 3305500
077 888 9388

976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை**



அசாதாரண சூழ்நிலையிலும் அனைத்து நாடுகளுக்கும் வழமைபோல் **100%** பாதுகாப்புடன் எமது சேவைகள் நடைபெறுகின்றது.

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**

இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.

தொ.பே:- 021 222 6113

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**



இல.01, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே:- 021 222 3536

**அருள்**

| | | |
|---|---|---|
| இ.போ.ச டிப்போ எதிரில், பருத்தித்துறை. | இல.01, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி. | இல.01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி. |

தொ.பே:- 076 443 1576 (C-1547)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (5969)

**யாழ். மாவை கலட்டி பாற்சாலை, கீரிமலை பால் விலை மாற்றம் பற்றிய அறிவித்தல்**

- 1 லீற்றர் கொள்விலை ரூபா 80/=
- 1 லீற்றர் விற்கும் விலை ரூபா 100/=

(C-1557)

கொள்வனவு செய்யும் இடங்கள் - கீரிமலை, கிளை சங்கானை

இவ் விலை மாற்றம் ( 01.03.2021 ) இன்று திங்கட்கிழமை முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

முகாமையாளர் - மாவை கலட்டி பாற்சாலை

☎-077 836 4858

**விரைவு பொதிகள் சேவை**

**V2 TRAVELS**

UK-1000/=Kg

பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-1546)

0768226240 DHL


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.